# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளை தாங்கிவரும் பத்திரிகை 25. 12. 1992

அன்பளிப்பு 40p


சிறீலங்கா அரசின் போக்கை மாற்றிய

## பலாலி கிழக்குச் சமர்

இராட்சத பலம் கொண்ட பலாலி தளத்தின் கிழக்குப் பகுதி மீது புலிவீரர்கள் 23-11-1992 நள்ளிரவில் தொடுத்த தாக்குதல், தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண்பதை கைவிட்டு இராணுவத் தீர்வுக்கு முக்கியத்துவம் கொடுத்த சிறீலங்கா அரசுக்கு, புலிகளை இராணுவ ரீதியாக வெல்ல முடியாது என்ற யதார்த்த நிலையைத் தெளிவுபடுத்தியுள்ளது.


சிங்களப் படைத்துறைத் தலைமையானது கைவசம் இரண்டு பாரிய இராணுவத் திட்டங்களை வைத்திருக்கின்றது. ஒன்று, யாழ் குடாநாடு மீதான படையெடுப்பு. இரண்டாவது, தென் தமிழீழத்தை சிங்களப் படைகளின் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது.

இந்த இரண்டு இராணுவத் திட்டங்களுள் எதற்கு முன்னுரிமை கொடுத்து முதலில் மேற்கொள்வது என்பதில் படைத்துறைத் தலைமைப் பீடத்தில் முரண்பாடுகளும் குழப்பங்களும் உள்ளது. இத்தகைய சூழ் நிலையில் பலாலி தளத்தின் கிழக்குப் பகுதி மீது நடத்தப்பட்ட புலிகளின் வெற்றிகரமான பெரும் தாக்குதல் யாழ்ப்பாண குடாநாட்டின் மீதான படையெடுப்புத் திட்டத்தை சிக்கலுக்குள்ளாக்கியுள்ளது.

'மிகக் குறுகிய நேரம் நடந்த, மிகக் கொடிய யுத்தம்' என சிங்கள இராணுவ அதிகாரியே கூறிய இத் தாக்குதலை, தாக்குதல் என்று சொல்வதை விட 'சமர்' (Battle) என்று சொல்லலாம்.

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

## யாழ். பல்கலைக்கழகம் மறுப்பு


UNIVERSITY OF JAFFNA

University Teachers for Human Rights - Jaffna Branch

"யாழ்ப்பாணத்தில் மனித உரிமை' என்ற தலைப்பில் பிரசுரிக்கப்பட்ட வெளியீடொன்று மனித உரிமைகளுக்கான பல்கலைக் கழக ஆசிரியர்கள் யாழ் கிளை என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ளதாக எமது கவனத்திற்கு கொண்டுவரப் பட்டுள்ளது. இந்தப் பிரசுரத்திற்கும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கோ அல்லது யாழ் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த எந்தவொரு ஆசிரியர்க்கோ எவ்வித தொடர்பும் இல்லை என்பதை யாழ் பல்கலைக் கழக நிர்வாக சபை மக்களுக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறது.' இவ்வாறு யாழ் பல்கலைக் கழக நிர்வாக சபையின் 142 வது கூட்டத்தில் யாழ் பல்கலைக் கழக நிர்வாக சபை மறுப்பு தெரிவித்துள்ளது. வெளிநாடுகளில் வெளிவந்துள்ள சில பொய்யான பிரசுரங்களை மக்கள் முன்பாக வெளிப்படுத்தும் நோக்கில் இதனை இங்கு மறுபிரசுரம் செய்கிறோம். (ஆர்) ■

## சமூக பொருளாதாரத் திட்டத்தால் இடம்பெயர்ந்த மக்கள் புதுவாழ்வு

### அகதிமுகாம்களை மாற்ற குடியிருப்புக்கள்

### ஏழம்ச உதவித்திட்டம்

விடுதலைப் புலிகளின் சமூக பொருளாதார வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இடம்பெயர்ந்த ஏழாயிரம் குடும்பங்களைச் சேர்ந்த முப்பதாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் ஒன்றிணைக்கப்பட்டு கொத்தணிக் கிராமங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இக் கொத்தணிக் கிராமங்கள் இடம்பெயர்ந்த மக்கள் நோய்த் தாக்கங்கள், தொழிலின்மை, உணவின்மை, மனோநிலைத் தாக்கங்கள் ஆகியவற்றால் சீரழிந்து உணவுக் கப்பல்களை எதிர்பார்த்து ஏங்கும் அகதி முகாம் வாழ்க்கையை மாற்றியமைத்துள்ளன. அகதி முகாம் வாழ்க்கையிலிருந்து நகர்ந்து குடியிருப்புக் கிராமங்களில் மக்கள் உழைத்து வாழும் வாழ்க்கை முறையாக அமைந்த இம்முறை நடைமுறையில் வெற்றியளித்து வருகின்றது.

வறுமைக் கோட்டின் கீழ் பின்தங்கிய நிலையில் இடம்பெயர்ந்த மக்களுக்காக விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட சமூக பொருளாதார வளர்ச்சித் திட்டம் ஏழு பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. கல்வி, சுகாதாரம், வீடமைப்பு, விவசாயம், புனர்வாழ்வு, தொழில் முயற்சி, பொதுத் திட்டம் என்ற நிறுவன வடிவங்களை ஏற்படுத்தி இடம்பெயர்ந்த மக்களுக்கான கொத்தணிக் கிராமங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

முல்லைத் தீவு மாவட்டத்தில் மூங்கிலாறு, பிரமந்தனாறு, உடையார்கட்டு, வள்ளிபுரம், சுதந்திரபுரம், தேசிபுரம், கைவேலி, பொக்கணை, கேப்பாபிலவு, முத்தயன்கட்டு, கெருடமடு போன்ற இடங்களில் சுமார் 1540 குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்து சுயதொழில் வாய்ப்புக்களும் அளிக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று தென்தமிழீழம், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இருந்து சிங்கள இராணுவப் படையெடுப்புக்களால் இடம்பெயர்ந்து யாழ் மாவட்டத்தில் புகலிடம் தேடிய சுமார் எழுநூறு குடும்பங்களுக்கு நவாலி, அரியாலை, கைதடி, மட்டுவில், நாகர்கோவில், செம்பியன்பற்று, தும்பளை, மானிப்பாய் ஆகிய ஊர்களில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெயர்ந்த நானூற்றி முப்பத்திரண்டு குடும்பங்களுக்கு ஸ்கந்தபுரம், புளியம்பொக்கணை, கோணாவில், பத்தாம் கட்டை ஆகிய பகுதிகளில் வீடுகளும் சுயதொழிலும் வழங்கப்பட்டுள்ளன.

மாத்தளன், இடைக்காடு, பொக்கணை, வலைஞர்மடம், பனையடி, முள்ளிவாய்க்கால், மந்துவில், புதுக்குடியிருப்பு, சிவநகர், இரணைப்பாலை, புதுப்பிலவு, ஒட்டிசுட்டான் ஆகிய பகுதிகளில், முல்லைத்தீவு மாவட்டத்தில் நடந்த சிங்கள இராணுவ படையெடுப்புக்களால் இடம்பெயர்ந்த மக்களுக்கு உலருணவுடன் உதவுதொகையும் அளிக்கப்பட்டுள்ளது. இங் ஒவ்வொரு குடியிருப்புத் தொகுதிகளுக்கும்

தொடர்ச்சி 10ம் பக்கம்

## அவுஸ்திரேலிய பாராளுமன்றக் கூட்டுக்குழு அரசிடம் கோரிக்கை

- சர்வதேச அவதானிகள் குழுவொன்றை அமைக்குக
- சிறிலங்காவுக்கு ஆயுத விற்பனை தடையை அமுலாக்குக

"அவுஸ்திரேலிய அரசாங்கம் கனடிய அரசாங்கத்துடன் சேர்ந்து ஐக்கிய நாடுகளின் அல்லது பொதுநல அமைப்பு நாடுகளின் பல்தேசிய முகவர்களின் உதவியுடன் சர்வதேச அவதானிகள் குழுவொன்றை அமைத்து அமைதிக்கான பேச்சுவார்த்தைகளை சிறீலங்கா அரசும் விடுதலைப் புலிகளும் தொடங்குவதற்கு உதவக் கூடிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்" என அவுஸ்திரேலிய பாராளுமன்றத்தின் வெளிவிவகாரம், பாதுகாப்பு, வர்த்தகம் ஆகியவற்றிற்கான கூட்டுக்குழு அவுஸ்திரேலிய அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது. இக்குழு பின்வரும் முக்கிய சிபார்சுகளையும் செய்துள்ளது.

- நியமிக்கப்படும் சர்வதேச அவதானிகள் குழுவானது சிறீலங்காவின் வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு வழங்கப்படும் மனிதாபிமான உதவிகளை மேற்பார்வையிட வேண்டும்.
- சிறீலங்காவுக்கு முழு அளவிலான ஆயுத விற்பனைத் தடை ஒன்றை அமுலாக்குவது பற்றி ஆராயப்பட வேண்டும்.

அவுஸ்திரேலிய அரசாங்கம் சர்வதேச நிலையில் மனித உரிமையினை பாதுகாக்கவும் அபிவிருத்தி செய்யவும் எடுக்கவேண்

தொடர்ச்சி 11ம் பக்கம் ...

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

# கிழக்கையாவது...

தமிழீழம் தனிநாடாக உலகப் படத்தில் இடம்பெற்று வருவதை சர்வதேச அரசியல், புவியியல் ஆய்வாளர்களே ஏற்றுவரும் நேரத்தில் சிங்கள-பௌத்த சிறீலங்கா அரசும் அதன் ஆயுதப் படைகளும் தமது தமிழீழ ஆக்கிரமிப்பு முற்றுகையின் அத்திவாரமே தகர்ந்துவிட்டதை உணரத் தொடங்கியுள்ளன.

இதனால் வட தமிழீழத்தை கைவிட்டு தென் தமிழீழத்தையாவது தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டுமெனும் பகற் கனவில் சிறீலங்கா அரசு தீவிரமாக இறங்கியுள்ளது.

இதன் அடிப்படையில் தனது முழு இராணுவப் பலத்தையும் தென் தமிழீழத்தின் மீது பிரயோகித்து ஆக்கிரமிப்பு யுத்தத்தை தீவிரப்படுத்தும் செயலில் சிறீலங்கா அரசு ஈடுபடத் தொடங்கியுள்ளது.

இரண்டு வருடத்திற்கு முன்னர் தாம் தென்தமிழீழத்தை தமது இராணுவக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து விட்டதாக பிரகடனப்படுத்தியது சிறீலங்கா அரசு. ஆனால் அன்று முதல் இன்று வரை தென் தமிழீழத்தில்தான் சிறீலங்கா இராணுவம் வடக்கை விட கூடுதலான இழப்புக்களைச் சந்தித்துள்ளது. தென் தமிழீழம் தன் முழு எதிர்ப்பையும் காட்டி சிங்கள-பௌத்த பேரினவாத சக்தியின் ஆக்கிரமிப்பு முயற்சியை முறியடித்து நிற்கிறது.

இலட்சக்கணக்கான வீடுகளைத் தரைமட்டமாக்கி, தென் தமிழீழத்தையே நிர்மூலமாக்கியும்கூட மக்கள் தேசப்பற்றுடன் தென் தமிழீழத்தில் விடுதலைப் புலிகள் வெற்றிவாகை சூட எத்தனையோ தியாகங்களைச் செய்து வருகின்றனர்.

உண்மையில் வரலாற்றைத் திரும்பிப் பார்த்தாலும்கூட தென் தமிழீழத்தில் அரசியல் விழிப்பு வடக்கிற்கு முதலே ஆரம்பமாகிவிட்டது. வடக்கில் இருந்த அரசியல்வாதிகள் இலங்கை பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் பெற்ற நாளை, 1948ல் கோலாகலமாக கொண்டாடிய நேரத்தில் தென் தமிழீழம் இலங்கையின் சிங்கக் கொடியைக் கிழித்தெறிந்து சிலிர்த்து எழுந்து இலங்கையின் சுதந்திர தினத்தை தமிழர்களின் துக்க நாளாக அனுட்டித்தது. அவ்வாறே தமிழரசுக்கட்சியின் காலகட்டத்தை எடுத்து நோக்கினாலும் வடக்கில் தமிழரசு உணர்வு காலூன்ற மறுத்த நேரத்தில் தென்தமிழீழத்தில்தான் அது வேரூன்றி வளர்ந்தது. தென் தமிழீழத்தில்தான் இன்னுயிர் ஈந்த தமிழ்த் தியாகிகளையும் முதலில் நம் வரலாறு சந்திக்கின்றது. அவ்வாறே விடுதலைப் புலிகளின் இயக்க வரலாற்றுப் பரிணாமிப்பிலும் தென் தமிழீழம் ஊக்க சக்தியாகவும் ஆக்க சக்தியாகவும் திகழ்ந்து வருகின்றது.

இயங்கியல் யதார்த்தத்துடன் நோக்கின் சிங்கள குடியேற்றங்களால் தென் தமிழீழத்தின் விவசாய மீன்பிடி வளங்கள்தான் முதலில் பாதிப்புற்றன. தென் தமிழீழத்தின் நிலம்தான் கேட்பாரற்ற சொத்தாக சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளால் முதலில் விழுங்கப்பட்டது. பட்டிப்பளை அருவி பாய்ந்த செந்தமிழ் நிலம் அம்பாறையாக மாற்றப்பட்டது. அல்லை கந்தளாய் சிங்களக் குடியேற்றத் திட்டங்களால் திரியாய என்ற செயற்கை தேர்தல் தொகுதி ஒன்று உருவாக்கப்பட்டது. இவ்வாறாக சிங்கள மயப்படுத்தலால் நேரடியாகத் தாக்குண்ட தென் தமிழீழ மக்களிடையே விடுதலை உணர்வு நீறு பூத்த நெருப்பாக திகழ்ந்து வந்தது. விடுதலைப் புலிகளின் தோற்றத்தால் தென் தமிழீழ மக்கள் அக்கினித் தூண்களாக போராட்ட வடிவெடுத்தனர்.

இந்த அக்கினித் தூண்களின் முன் எந்த அடக்குமுறையும் தோல்வியுறும் என்பதை சிறீலங்கா அரசின் இராணுவத் தோல்விகளால் தென் தமிழீழம் உலகிற்கு உணர்த்தியுள்ளது.

ஆனால், உலகின் இராணுவ கடல்வழி கேந்திர நிலையமான திருகோணமலையையும் பகமை கரையாரும் தென் தமிழீழத்தையும் எப்படியாவது தனது ஆக்கிரமிப்புக் கரங்களுள் விழுத்திவிட வேண்டும் என்ற நோக்கில் முதலில் வடக்கு கிழக்கு இணைப்பைத் துண்டாட அரசியல் ரீதியாக முயன்று சிங்கள அரசு படுதோல்வியைத் தழுவிவிட்டது. இனி தனது முழு இராணுவப் பலத்தையும் பயன்படுத்தி கிழக்கையாவது தன் வசம் தக்க வைக்க துடிக்கிறது. இராணுவ உள் அமைப்பே சிதைக்கப்பட்டு இராணுவ ஆட்பல இழப்பை ஈடுசெய்ய முடியாது தவிக்கும் சிறீலங்கா கட்டுப்பாட்டுத் தலைமையகமும் தன்னிடமுள்ள இராணுவ ஆட்பலமும் முற்றாகச் சிதைவதற்கிடையில் ஆயுத பலத்தைக் காட்டக் கூடிய முறையிலிருக்கும் இராணுவ ஆட்பலம் முழுவதையும் தென் தமிழீழத்தின் மீது பிரயோகித்து தொடர் யுத்தத்தைத் தொடங்க ஆயத்தமாகிறது. இதன் மூலம் மற்றொரு இனப்படுகொலைக்கு சிறீலங்கா அரசு கங்கணம் கட்டி நிற்கிறது.

ஆயினும் தென் தமிழீழத்தின் ஒவ்வொரு துளி மண்ணும் சிங்கள இராணுவத்தைச் சுட்டெரிக்கும் சக்தி படைத்தது. விடுதலை உணர்வின் தணல் மேல் நடக்க முற்பட்டால் சிறீலங்கா அரசு பேரிழப்புக்களைத் தான் சந்திக்குமே தவிர ஒரு துண்டு நிலத்தைக் கூட இனித் தென்தமிழீழத்தில் ஆக்கிரமிக்க புலிகளும் மக்களும் விட்டுவே விட மாட்டார்கள். அவ்வாறே வட தமிழீழமும் தென் தமிழீழமும் பிரிக்கப்பட முடியாத தமிழ் மண்ணாகும். அதனை அரசியல் ரீதியாகவோ இராணுவ ரீதியாகவோ இனி யாராலும் துண்டாட முடியாது. ■

# உயிர் காக்கும் மருந்துகள் மீது ஜே.ஓ.சி. தீவிர கட்டுப்பாடு

யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, கொழும்புக்கு அனுப்பிய மருந்துப் பட்டியலில் உயிர்காக்கும் மருந்துகளின் வகை தொகையை, கூட்டு நடவடிக்கைத் தலைமையகம் (ஜே.ஓ.சி.) குறைத்து வழங்க அனுமதித்துள்ளது. 1992 ஆண்டு தேவைப்பட்டியலிலேயே ஜே.ஓ.சி. மருந்து வகைகளைக் கடுமையாக கட்டுப்படுத்தியுள்ளது என்று யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் பொ. இரத்தினசபாபதி தெரிவித்துள்ளார்.

வருட ஆரம்பத்திலேயே மருந்து தேவைகளை யாழ் பிராந்திய சேவைகள் பணிமனை கொழும்பு சுகாதார சேவை அதிகாரிகளுக்கு அறிவித்திருந்தது.

குளக்காசிலின், அமொக்சிலின் கூட்டுக்குளிசைகள், பென்சலின் வில்லைகள் போன்ற உயிர்முறிப்புக் கொல்லி (Antibiotics) ஆகிய பிரதான மருந்து வகைகளின் அளவைக் குறைத்தே யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டு உள்ளது. 58,000 குளக்காசிலின் கூட்டுக்குளிகைகள் கேட்கப்பட்டன. ஆனால் 14,000 குளிகைகளே அனுப்பப்பட்டுள்ளன. 5,35,000 அமொக்சிலுக்குப் பதிலாக 2,000 குளிகைகளே அனுப்பப்பட்டுள்ளன. மேலதிகமாக சக்தி குறைந்த அம்பிசிலின் குளிகைகள் 25,000 அனுப்பப்பட்டுள்ளன. 19,70,000 பென்சிலின் வில்லைகளுக்குப் பதிலாக 5,85,000 வில்லைகளே அனுப்பப்பட்டுள்ளன என்று டாக்டர் இரத்தினசபாபதி மேலும் தெரிவித்தார்.

நாய் கொல்லி மருந்தான சிக்வின் கடந்த ஐந்து மாதங்களாக அனுப்பப்படவில்லை. அதனால் விசர் நாய்க்கடி அதிகரித்துள்ளது. விசர் நாய்க்கடி மருந்தும் மட்டுப்படுத்தப்பட்ட தொகைதான் வருகிறது. கிளிநொச்சிக்கும் யாழ்ப்பாணத்துக்குமாக 5,000 லீற்றர் அனுப்பப்பட்டது. அதில் யாழ்ப்பாணத்திற்கு 4,000 லீற்றர் தரப்பட்டுள்ளது. சாதாரணமாக வயது வந்த ஒருவருக்கு 17 ஊசி போட 51 மில்லி லீற்றர் தேவைப்படுவதாகவும், இந்த மருந்தும் பற்றாக்குறையாக இருப்பதாகவும் தெரிவித்தார். ■

# தமிழீழ பொதுக் கல்வித் தேர்வு

தமிழீழத்தில் பாடசாலைக் கல்வியானது சிங்கள அரசின் திட்டமிட்ட அழிவு நடவடிக்கைகளால் பாதிப்படைந்துள்ளது.

பொதுவாக நடக்கும் தேர்வுகள் நடக்காமல் விடுவதும், காலம் கடந்து நடப்பதும் சாதாரண நிகழ்ச்சிகள்.

இதன்மூலம் அடுத்த ஆண்டு கல்வியைத் தொடரும் மாணவன் பல சிக்கல்களைச் சந்திக்கின்றான். பாடசாலையும் சிக்கலைச் சந்திக்கின்றது.

உதாரணமாக கல்விப் பொதுத் தராதர (சாதாரண) தேர்வு சரியான காலத்தில் நடவாது போனாலும் தேர்வும் [illegible] உயர் வகுப்பை மாணவர் தொடர்வதில் சிக்கல் ஏற்படுகின்றது.

தமிழீழ மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும், ஆசிரியர்களின் அறிவாண்மை விருத்திக்காகவும், வளங்களின் உச்சப் பயன்பாட்டை பெறுவதற்குமாக அமைக்கப்பட்ட தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை தமிழீழ பொதுக் கல்வித் தேர்வு (1992) என்னும் முன்னோடி தேர்வு ஒன்றை இந்த ஆண்டு முதன் முறையாக நடத்தியது.

இதில் வட தமிழீழத்தில் இருந்து ஏறத்தாழ 16794 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

யாழ், கிளிநொச்சி, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் இருந்து முறையே 12940, 1402, 1427, 582, 443 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இத்தேர்வானது மாணவர்களை க.பொ.த. (சாதாரண) தேர்வுக்கு தம்மைத் தயார் படுத்த உதவுவதுடன் க.பொ.த. (சாதாரண) தேர்வு நடக்காத பட்சத்தில் உயர்தர வகுப்பில் எந்த மாணவர்கள் கல்வியைத் தொடரலாம் எனத் தீர்மானிக்க பாடசாலைகளுக்கு உதவியாக இருக்கும்.

மிகுந்த சிக்கல்களை எதிர்நோக்குகின்ற போதிலும் தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினரின் இப் பெரிய முயற்சி பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

தொடர்ந்து வரும் ஆண்டுகளிலும் இம்முயற்சி தொடர வேண்டும்.

அதேவேளை தமிழீழத்தில் வேலைவாய்ப்புக்களுக்கும், வேறு விடயங்களுக்கும் கல்வித் தகைமைகள் பார்க்குமிடத்து தமிழீழ பொதுக் கல்வித் தேர்வு சான்றிதழ்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும்.

தமிழீழ கல்வி அமைப்பில் உடனடியாக நாம் பெரிய மாற்றங்களை செய்ய முடியாது இருந்தாலும் இவ்வாறான முயற்சிகள் நாளை நாம் நினைக்கும் வண்ணம் மாற்றங்களை கொண்டுவர தேவையான படிநிலைகளை வழங்கும் என்பதில் சந்தேகமில்லை. ■

நன்றி - 'சாளரம்' (தமிழீழம்)



வல்வெட்டித்துறை, பளை, நாகர்கோவில் ஆகிய இடங்களில் தமிழீழக்காவல் துறையினரால் காவல் நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

## வெள்ள நிலையிலும் தாக்குதல்

மட்டக்களப்பு படுவான்கரைப் பகுதியில் மூன்றடி உயரத்திற்கு வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு ஒரு இலட்சத்திற்கு அதிகமான மக்கள் வீடிழந்த நிலையிலும், சிறீலங்கா இராணுவம் 'ஜெயகங்கா' என்ற பெயரில் இராணுவ நடவடிக்கையில் இறங்கியுள்ளனர். இத்தாக்குதலில் மூன்று பொது மக்கள் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியாகியுள்ளனர். இதற்கிடையே திருகோணமலைப் பகுதியிலும் 'சத்தலிய' என்ற பெயரில் இராணுவ நடவடிக்கை ஒன்றை சிறீலங்கா இராணுவம் ஆரம்பித்துள்ளது. ■

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# இரண்டு வருடப் போரில் புலிகள் 2,000 ஆயுதங்களை அள்ளினர்

■ வீரவணக்கக் கூட்டத்தில் யோகி தகவல்

"கடந்த இரண்டு வருடகால விடுதலைப் போரில், விடுதலைப் புலிகள் எதிரிகளிடமிருந்து 2 ஆயிரம் ஆயுதங்களைப் பறித்துள்ளார்கள். தமிழீழ விடுதலைப் போரில் இதுவரை 5, 100 போராளிகளை விடுதலைப் புலிகள் இழந்துள்ளனர். இவர்களில் 343 பேர் பெண் போராளிகள்."

பூநகரிப் பகுதியில் அண்மையில் இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய வெற்றிகரத் தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மன்னார் மாவட்டச் சிறப்புத் தளபதி லெப் கேணல் சுபன் உட்பட 7 மாவீரர்களின் நினைவாக யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெற்ற வீரவணக்கக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் கல்விக் குழுப் பொறுப்பாளர் திரு. யோகரட்ணம் யோகி இதனைத் தெரிவித்தார்.

இந்தியப் படையினரும் தமிழீழத்தை விட்டுச் சென்றபோது விடுதலைப் புலிகளிடம் பெட்டி பெட்டியாக ஆயுதங்களைப் பறிகொடுத்துச் சென்றார்கள். அவர்களுக்குத் துணைநின்ற துரோகக் கும்பல்களும் பெட்டிகளைத் திறக்காமலேயே ஆயுதங்களை விட்டுச் சென்றார்கள். எம்மிடமிருந்து ஆயுதங்களைப் பறிக்க வந்தவர்கள் தமது ஆயுதங்களையே பறிகொடுத்து சென்றனர், என்றும் திரு. யோகி மேலும் கூறினார்.

மேற்படி கூட்டத்தில் விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் பலர் உரையாற்றினார்கள். இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. ■

# கிளிநொச்சி மக்கள் திரண்டு மாவீரர்களுக்கு அஞ்சலி

ஆனையிறவு உப்பள தொடர் காவல் அரண்கள் மீது அண்மையில் இடம்பெற்ற தாக்குதலின் போது வீரமரணமடைந்த 15 போராளிகளில் 7 பேரின் புகழுடல்களுக்கு கிளிநொச்சியில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

கிளிநொச்சி திருநகர் கிராம முன்னேற்ற மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த இம்மாவீரர்களின் புகழுடல்களுக்கு பெரும் எண்ணிக்கையான மக்கள் கண்ணீர் மல்கத் தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

பின்னர் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் பிரமுகர் திரு. யோகரட்ணம் யோகி, கிளிநொச்சி மாவட்ட கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. செழியன் ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து மாவீரர்களின் புகழுடல்கள் பாண்ட் வாத்தியம் முழங்க அலங்கரிக்கப்பட்ட ஊர்திகளில் பிரதான வீதி வழியாக ஊர்வலமாக புதுமுறிப்பு மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

வழியெங்கும் மக்கள் வீடுகளின் முன் பூரண கும்பம், குத்துவிளக்கு வைத்து மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தினர். மக்களின் மனநிலையைப் பிரதிபலிப்பது போல் அன்று கிளிநொச்சி மாவட்டமே சோகமயமாகக் காட்சியளித்தது. ■

# திருக்கேதீஸ்வரம் தலத்தில் பாரிய இராணுவ முகாம்

■ ஆலயம் பலத்த சேதம்

திருக்கேதீஸ்வரம் அருள்மிகு சிவன் கோவிலில் பாரிய இராணுவ முகாம் அமைக்கப்பட்டு பெருமளவு படையினர் குவிக்கப்பட்டிருப்பதை 'ரூபவாகினி' ஒளிபரப்பியது.

மன்னாருக்கு விஜயம் செய்த சிறீலங்காப் பிரதமர் விஜயதுங்க சிவன் கோவிலில் நிலை கொண்டுள்ள படை முகாமுக்கும் விஜயம் செய்தார்.

இவர் தலைமையில் நடைபெற்ற கூட்டம் கோவிலின் பெரிய மடம் ஒன்றிலேயே நடைபெற்றது. இதன்போது சிதைவடைந்த நிலையிலிருந்த ஆலய சிற்பங்களையும் காணக்கூடியதாக இருந்தது.

கோவில் மடங்களின் கதவுகள் யாவும் உடைக்கப்பட்ட நிலையில் வரலாற்றுப் புகழ் மிக்க இத் திருத்தலத்தில் படையினர் நிலைகொண்டிருப்பதும் கோவிலின் பூசைகள் யாவும் நிறுத்தப்பட்டிருப்பதும் இந்துக்கள் மத்தியில் பெரும் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. ■

# ஞாயிறும் செயற்படும் ஒரே ஒரு பல்கலைக்கழகம்

யாழ். பல்கலைக்கழகம் ஞாயிற்றுக் கிழமைகளிலும் இயங்கி வருகின்றது. ஞாயிற்றுக்கிழமைகளிலும் இயங்கும் ஒரே யொரு பல்கலைக்கழகம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமே.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்ற வெளிவாரி மாணவர்களுக்கான வரவேற்புரையின் போது யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பீட விரிவுரையாளர் திரு. சபா ஜெயராசா குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், ஞாயிற்றுக்கிழமைகளில் கடமையாற்றுவதற்கு மேலதிக வேதனம் பெறாமலே விரிவுரையாளர்கள் கடமையாற்றுவதாகவும் கூறினார். ■

# பல்கலைக் கழக மாணவர்கள் சுழற்சி முறையில் இரத்ததானம்

யாழ். போதனா வைத்திய சாலையில் ஏற்பட்ட இரத்தத் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு உதவும் பொருட்டு, யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் இரத்தானம் செய்ய முன்வந்தனர். இவர்கள் சுழற்சி முறையில் இரத்ததானம் செய்தனர்.

இதேவேளை இரத்தத்திற்கு தட்டுப்பாடு நிலவுவதாக அறிவித்தும் பொதுமக்கள் இரத்தானம் செய்ய முன்வரவில்லை என்று இரத்த வங்கியின் பொறுப்பாளர் டாக்டர் இராஜராஜேஸ்வரன் கவலை தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள பொது நிறுவனங்கள், சனசமூக நிலைய [illegible] நிலைய உறுப்பினர்கள் ஆகியோர் இரத்த தானம் செய்ய முன்வரவேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். ■

# நாள் ஒன்றுக்கு 8 பேர் வீதம் முதல் ஒன்பது மாதங்களிலும் 827 படையினர் பலி

இந்த ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் மட்டும் 827 படையினர் விடுதலைப் புலிகளினால் கொல்லப்பட்டனர் என்று கூட்டு நடவடிக்கைகள் கட்டளைப்பீடம் (ஜே.ஓ.சி.) தெரிவித்துள்ளது.

மாதாந்த ரீதியில் கொல்லப்பட்ட படையினரின் எண்ணிக்கை விபரத்தையும் கூட்டுப்படைகள் கட்டளைப்பீடம் வெளியிட்டிருக்கிறது.

அவ்விபரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| ஜனவரி | 90 |
| பெப்ருவரி | 71 |
| மார்ச் | [illegible] |
| ஏப்ரல் | [illegible] |
| மே | [illegible] |
| ஜூன் | 79 |
| ஜூலை | 167 |
| ஆகஸ்ட் | 57 |
| செப்டம்பர் | 87 |

தினமும் சராசரி எட்டு படையினர் என்ற வீதத்தில் படையினரின் உயிரிழப்பு இருந்து வருவதாக சண்டே டைம்ஸ் தகவல் வெளியிட்டிருக்கிறது. ■

# வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து நேரடியாக மருந்து உதவி பெறத்தடை

■ பிராந்தியப் பணிப்பாளருக்கு சுகாதார அமைச்சு உத்தரவு

பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர்கள் இனிமேல் சர்வதேச நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்களிடமிருந்து மருந்து வகைகள் மற்றும் வைத்திய உபகரணங்களை நேரடியாக உதவியாகப் பெற முடியாது.

அவ்வாறு உதவி பெறுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. சுகாதார, மகளிர் விவகார அமைச்சு இத்தடை விதிப்புச் சம்பந்தமான சுற்று நிருபம் ஒன்றைச் சகல பிராந்திய சுகாதாரப் பணிப்பாளருக்கும் அனுப்பி வைத்துள்ளது.

பிரஸ்தாப அமைச்சின் செயலாளர் டாக்டர் ஜோர்ச் பெர்னாண்டோ அனுப்பியுள்ள 1765 ஆம் இலக்கச் சுற்று நிருபத்தில் சர்வதேச நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்களிடமிருந்து பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர்கள் எந்தவித உதவிகளையும் நேரில் பெறக்கூடாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் உள்ள பல பிராந்திய பணிப்பாளர்கள் மருந்து, உபகரணங்கள், வாகனங்கள் ஆகியவற்றை நேரடியாக சர்வதேச நிறுவனங்களிடமிருந்து பெற்று வருவதாகத் தெரிய வந்துள்ளது. இந்த வகையான உதவிகளை இனி அமைச்சின் ஊடாகவே பெறவேண்டும். என்று அச்சுற்று நிருபத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

# சிங்க வீரம் குறைந்துவிட்டது எல்லாளர் தாக்குகின்றனர்.

■ இராணுவ முகாம் பொறுப்பதிகாரி கவலை

"இன்று எங்கள் சிங்க வீரம் குறைந்துவிட்டது. எல்லாளர்கள் எம்மைத் தாக்குகிறார்கள். நீங்கள் வீர துட்டகைமுனுக்களாக மாற வேண்டும்" இவ்வாறு நாகம 'ரணவிரு செவண' இராணுவ முகாம் பொறுப்பதிகாரி கப்டன் ஆர். தோமஸ் கதன்பால சிங்கள இளைஞர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாகம, கதங்கமுவவிலுள்ள பௌத்த விகாரை சமய பாடசாலை தொடக்க விழாவில் அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

அவர் மேலும் பேசுகையில், இராணுவத்தில் சேருபவர்களின் தொகை இன்று வெகுவாகக் குறைந்துள்ளது. வாய்விச்ச அரசியல்வாதிகளின் தொகை நாட்டில் அதிகரித்து வருகிறது. நாட்டுப்பற்றும் இனப்பற்றும் அழிந்துபோகும் நிலை ஏற்பட்டு வருகிறது. நம் இனத்தின் கழுத்து நெரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

எனவே இந்நிலையிலிருந்த நாட்டைக் காக்க வேண்டுமாயின் சிங்கள பௌத்த இளைஞர்கள் இராணுவத்தில் இணைந்து கொள்ள வேண்டும். இளைஞர்களிடம் அருகிப் போய்க் கொண்டிருக்கும் இன, மொழி, நாட்டுப்பற்றை சமய பாடங்களை கற்பிக்கும் விகாரையிலுள்ள பாடசாலைகள் வளர்த்தெடுக்க வேண்டும் என்றார். ■

# சண்டை இல்லா நாடு இல்லை உங்கள் நாட்டிற்கு செல்லுங்கள்

■ தமிழ் நாடு அகதிகள் அலுவலர் தெரிவிப்பு

"எந்த நாட்டில் இப்போது சண்டை நடக்கவில்லை அமெரிக்காவில் அடிக்கடி உள்நாட்டுக் கலவரம் நடக்கிறது. ரஸ்யா என்ற நாடே இப்போது இல்லை. இந்தியாவில் இல்லாத சண்டையா? காஸ்மீரில் கலவரம் தொடர்கதையாக நடைபெறுகின்றது. பஞ்சாப்பில் படுகொலைகள் தினந்தோறும் நடைபெறுகின்றது. எங்கள் நாட்டில் ஏராளமான பிரச்சினைகள் இருந்தும் அவற்றைச் சமாளித்துக்கொண்டு உங்களுக்கு உதவி செய்துள்ளோம். அதனைப்பயன்படுத்தி இங்கேயே இருக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கக் கூடாது உங்கள் நாட்டுக்கு நீங்கள் திரும்பிச் செல்ல வேண்டும்."

இவ்வாறு தமிழக அகதிகள் நல்வாழ்வு அலுவலர் ராம்தாஸ்' நாட்டரசன்கோட்டை, கொல்லங்குடி ஆகிய இடங்களில் உள்ள அகதி முகாம்களுக்கு விஜயம் செய்து அங்குள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுடன் உரையாடும்போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், எல்லாரும் ஒரு நாள் சாக வேண்டியவர்கள் தான் அதற்காகப் பயந்து கொண்டு எத்தனை நாள் வாழ்வது இதுபற்றி யோசித்து உங்கள் நாட்டிற்கு திரும்பிச் செல்வது குறித்து சிந்திக்க வேண்டும் எனத் தெரிவித்தார். ■

# தாண்டிக்குளத்தில் தடுத்துவைப்பு

தாண்டிக்குளம் பாடசாலை தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழர்களின் தொகை அதிகரித்துள்ளது.

வடபகுதியிலிருந்து தென்பகுதி நோக்கிச் செல்வோரில் சந்தேகத்திற்கு உரியவர்கள் இத்தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது முப்பதிற்கும் மேற்பட்டோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ■

# குடாநாட்டில் 3 மாதங்களில் 3667 பேருக்கு மலேரியா

கடந்த யூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மாத காலத்தில் 3 ஆயிரத்து 867 பேர் மலேரியா இரத்தப் பரிசோதனை செய்துள்ளனர். அவர்களில் 3,667 பேருக்கு மலேரியா இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேலும் 211 பேர் மூளைக்காய்ச்சலை உருவாக்கக்கூடிய மலேரியாவினால் பீடிக்கப்பட்டிருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவின் மருந்து விநியோகப்பகுதியில் நடந்த சுகாதார வைத்திய அதிகாரிகளின் கலந்துரையாடலில் இந்த விபரம் தெரிவிக்கப்பட்டது.

யூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களை உள்ளடக்கிய காலாண்டு காலப்பகுதியில் காணப்பட்ட நோய்களின் மதிப்பீடு தொடர்பாக இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

பிராந்திய சுகாதார சேவைப்பணிப்பாளர் திரு. பொ. இரத்தினசபாபதி இக்கலந்துரையாடலுக்கு தலைமை வகித்தார். குடா நாட்டில் மலேரியா நோய் தீவிரமாகப் பரவி வருவது பற்றியும், அதனைத் தடுக்க சுகாதார அதிகாரிகள் மட்டத்திலும் பொது மக்கள் மத்தியிலும் எடுக்கப்பட வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் பற்றியும் அங்கு விரிவாக ஆராயப்பட்டது.

வயிற்றுளைவு, நெருப்புக்காய்ச்சல், வயிற்றோட்டம், செங்கமாரி, தொழுநோய் போன்ற நோய்கள் பற்றியும் மற்றும் போசாக்கின்மை பிரச்சனை தொடர்பாகவும் இக்கலந்துரையாடலில் தகவல்கள் தெரிவிக்கப்பட்டன. ■

இடம்பெயர்ந்த மாணவர்களில்

# 45 வீதமானோர் படிப்பை நிறுத்தினர்

தீவகத்தில் இருந்து இடம்பெயர்ந்த மாணவர்களில் 45 சத வீதத்தினர் தமது கல்வியை இடைநிறுத்தியுள்ளனர்.

தீவகத்தில் இருந்து இராணுவ நடவடிக்கை காரணமாக பெரும் எண்ணிக்கையான மக்கள் கடந்த வருடம் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் இடம்பெயர்ந்தனர்.

இடம்பெயர்ந்த மாணவர்கள் யாழ் நகரப்பகுதியில் உள்ள பாடசாலைகள் உட்பட அவ்வப் பகுதிப் பாடசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

எனினும் அவர்களில் 45 வீதத்தினர் படிப்பை இடைநிறுத்தியுள்ளனர் என்பது ஆய்வு மதிப்பீடுகளிலிருந்து தெரிய வந்துள்ளது. ■

மருத்துவ வசதியின்றி நோயினால்

# இறந்தவர்களின் சடலங்களை குழி தோண்டிப் புதைத்தோம்

■ படையினரிடமிருந்து மீண்டு வந்த மாணவர் தகவல்

மருத்துவ மற்றும் சுகாதாரவசதியின்றி நோயினால் இறந்த நான்கு வயோதிபர்களின் உடல்களை இளவாலை கன்னியர் மட முகாமுக்கு அருகே உள்ள வெளிகளில் நாங்களே குழி தோண்டிப் புதைத்தோம்.

இராணுவத்தின் பிடியிலிருந்து விடுதலை பெற்று யாழ் வந்து சேர்ந்த அந்தோனிப்பிள்ளை இமானுவேல் என்ற மாதகல் மாணவன் செய்தியாளரிடம் இவ்வாறு தெரிவித்தார்.

இவர் கடந்த ஆகஸ்டில் நடந்த இராணுவ நடவடிக்கைகளின் போது இளவாலைப் பகுதியில் வைத்து இராணுவத்தின் பிடியில் சிக்கினார். படையினரிடம் சிக்கியுள்ள மக்களின் நிலை பற்றி அவர் மேலும் தெரிவித்தாவது:-

நாம் தங்கியிருந்த இளவாலை கன்னியர் மட முகாமில் சுமார் 300 பேர் சிக்கியுள்ளனர். இம் முகாமுக்கு மருத்துவ, சுகாதார வசதிகள் எதுவும் கிடையாது. அசுத்தத்தின் மத்தியில் வாழ்வதால் பலர் நோய்களால் பீடிக்கப்பட்டுள்ளனர். இந்நிலை நீடித்தால் இன்னும் பலர் நோயினால் பாதிக்கப்படுவர். இவ்வாறு நோயினால் இறந்த நான்கு வயோதிபர்களின் உடல்களை நாங்களே குழி தோண்டிப் புதைத்தோம்.

பயத்தினாலும், நோயினாலும் பலர் மனநிலை பாதிக்கப்பட்டு பைத்தியக்காரர்கள் போல் அலைந்து திரிகின்றனர்.

நாம் பரீட்சை எழுத வேண்டும் என்ற ஒரு நிலை எழுந்ததால் எமக்கு அங்கிருந்து வெளியேற சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால் அங்கே சிக்கியிருக்கும் ஒவ்வொருவரும் வெளியேறவே விரும்புகின்றனர்.

முன்னதாக இளவாலையில் வைத்து எம்மைக் கைது செய்த இராணுவத்தினர் இரண்டு வாரங்களின் பின்னர் எம்மை பொலிசாரிடம் ஒப்படைத்தனர். நாம் பொலிசாரிடம் பல மாதி அடியும் உதையும் வாங்கியே காலத்தைக் கழித்தோம் என்றார். ■

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# விதவைப் பெண்களுக்கு தொழில் வாய்ப்பு

விதவைப் பெண்களுக்கு தொழில் வாய்ப்பு அளிக்கும் முயற்சியில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

கட்டுடைப்பகுதியில் தெரிந்தெடுக்கப்பட்ட அகதிகளுக்கு அரிசியை இடித்து மாவாகப் பைகளில் அடைத்து விற்பனை செய்யும் தொழிலில் அவர்களை மேற்படி நிறுவனம் ஈடுபடுத்தியுள்ளது.

விதவைகளுக்கான உதவித் திட்டத்தின் கீழ் இதில் சேர்ந்துள்ள விதவைப் பெண்களுக்கு ஊக்குவிப்புப் பணம், நிவாரணப் பொருட்கள், உணவுப் பொருட்கள் ஆகியவற்றை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் வழங்கி வருவதுடன் விதவைப் பெண்களின் பிள்ளைகள் படிப்பதற்கு வேண்டிய கல்வி உபகரணங்களையும் வழங்கி வருகின்றது. ■

# சாய்ந்தமருது அகதி முகாமில் 275 தமிழர்கள் பட்டினி

அம்பாறை மாவட்டத்திலுள்ள சாய்ந்தமருது சமநலசேவைகள் நிலைய அகதி முகாமில் இருக்கும் 275 தமிழ் மக்கள் பட்டினியால் வாடிக் கொண்டிருக்கிறார்கள்.

நவசமசமாஜக் கட்சிப் பிரமுகர் திரு வி. திருநாவுக்கரசு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் பி. தயாரத்னவின் கவனத்திற்கு இதனைக் கொண்டு வந்தார்.

அகதிகளை வீடு திரும்புவதற்கு நிர்ப்பந்திக்கு முகமாகவே அவர்களுக்கான உலர் உணவு பங்கீடு நிறுத்தப்பட்டுள்ளதாகவும், அகதிகளுக்கான குடிசைகள் திருத்தப்படாது அவை பழுதடைந்த கட்டத்தை எட்டியிருப்பதாகவும் அவர் தமது கடிதத்தில் அமைச்சருக்கு எடுத்துக் கூறியுள்ளார். ■

# அகதி முகாம்களில் படைக்கு ஆட்சேர்ப்பு

■ தமிழ் இளைஞர்களை கொண்ட படையணி

■ அநுராதபுர முகாமில் பயிற்சி

இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பி வந்த தமிழ் அகதிகளை இராணுவத்திலும் பொலிசிலும் சேர்த்துக் கொள்ளும் முயற்சியில் சிறிலங்கா அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. வவுனியாவில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள வேப்பங்குளம், ஆசிக்குளம், தாண்டிக்குளம் முகாம்களிலிருந்தே ஆட்சேர்ப்பு இடம்பெறுவதாக நம்பகரமான வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

அகதி முகாம்களில் திரட்டப்படும் இவ் இளைஞர்களைக் கொண்டு புதிய படையணி ஒன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு சிறிலங்கா அரசாங்கம் இவர்களுக்கு அநுராதபுரத்தில் பயிற்சி அளித்து வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வவுனியாவில் இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள வேப்பங்குளம், ஆசிக்குளம், தாண்டிக்குளம் ஆகிய இடங்களில் இந்தியாவில் இருந்து திரும்பி அகதி மக்கள் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த அகதி மக்களில் நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் இராணுவத்திலும் பொலிசிலும் இணைக்கப்பட்டுள்ளனர்.

'கொப்பேக் கடுவ ரெஜிமென்ட்' என்ற பெயரில் தனித்தமிழ் இளைஞர்களைக் கொண்ட இராணுவம் தற்போது வவுனியாவில் சேவைக்கு விடப்பட்டுள்ளது. இவர்களுக்கு வித்தியாசமான சீருடையும் வழங்கப்பட்டுள்ளது.

இதேபோல பொலிசிலும் நூற்றுக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களும் தனிப்பிரிவாகவே செயற்படுகின்றனர்.

இந்த இராணுவத்திலும், பொலிசிலும் திருமணமான வாலிபர்களும் இணைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான பயிற்சிகள் அநுராதபுரத்தில் இடம்பெற்றது என மேலும் தெரிவிக்கப்படுகிறது. தற்போது வேப்பங்குளம் அகதிமுகாமிலிருந்து இராணுவத்தில் இணைக்கப்பட்ட இளைஞர்களுக்கான பயிற்சி நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சிறீலங்கா இராணுவத்தில் தப்பியோடும், கொல்லப்படும் இராணுவத்தின் தொகையை ஈடுசெய்யவே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கூறப்பட்டது.

மேற்படி பிரிவில் இணைக்கப்பட்டுள்ள இளைஞர்களின் குடும்பங்களுக்கு மேலதிக நிவாரணக் கொடுப்பனவுகளும் சலுகைகளும் வழங்கப்படுவதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவல்களைப் பாதுகாப்பதில் இராணுவ மற்றும் அரசாங்க மேலிடம் மிகத் தீவிரமாக இருப்பதாகவும் தெரிகிறது. திருமலையில் தங்கவைக்கப்பட்டுள்ள தமிழ் அகதிகளிடமிருந்தும் மேற்படி படைப்பிரிவுக்கு ஆட்சேர்ப்பு நடப்பதாக இன்னொரு தகவல் தெரிவிக்கின்றது. ■

# யாழ் ஆஸ்பத்திரியில் 28000 நோயாளிகள் சிகிச்சை பெற்றனர்

யாழ் போதனா வைத்தியசாலையில் கடந்த அக்டோபர் மாதம் மட்டும் வெளிநோயாளர் பகுதியில் 28,000 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவர்களில் அநேகமானோர் வயிற்றுளைவு, காய்ச்சல், சளி சுரம், அம்மா, நாய்க்கடி மற்றும் காயங்கள், மலேரியா போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றவர்களாவர்.

உட்பகுதியில் 5,000 பேர் நோயாளர் விடுதியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவர்களில் நெருப்புக்காய்ச்சல், மலேரியா, செங்கமாரி, கொலரா, வயிற்றுக்குத்து போன்ற நோய்களாலும் விபத்துக்காயங்களாலும் அனுமதிக்கப்பட்டிருந்தனர். பிரசவ விடுதியிலும் கடுமையான குறைமாதக் கர்ப்பிணிகளும் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்டிருந்தனர். ■

<u>போரூட் ஸ்தாபனத்தாரால்</u>

# 50 குடும்பங்களுக்கு வீடுகள் கையளிப்பு

வட்டுக்கோட்டை கிழக்குப் பகுதியில் கழிநீரம் போரூட் ஸ்தாபனத்தாரால் 50 குடும்பங்களுக்கான 50 வீடுகள் அமைக்கப்பட்டு குடியமர்த்தப்பட்டுள்ளன.

தனித்தனி வீடுகளாக அமைக்கப்பட்டுள்ள இந்த 50 வீடுகளும் சீற் ஓட்டினால் வேயப்பட்டுள்ளன.

இந்த 50 வீடுகளிலும் அகதிகளாக இருந்த மாதகல், சில்லாலைப் பகுதி மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான சுகாதார வசதிகளையும் குடிநீர் வசதிகளையும் செய்து கொடுப்பதற்கான துரித நடவடிக்கைகளை போரூட் ஸ்தாபனம் மேற்கொண்டு வருகிறது. ■

### மன்னாரில் இராணுவ வேலி முறியடிப்பு

■ ஜான்

மன்னார் மாவட்டத்தில் 30 மைல் நீளமான பாரிய இராணுவ வேலியை அமைக்கும் சிறீலங்கா இராணுவத்தின் திட்டம், விடுதலைப் புலிகளின் தொடர்ச்சியான தாக்குதல்களினால் முறியடிக்கப்பட்டுள்ளது என மன்னார் மாவட்டச் சிறப்புத் தளபதி திரு ஜான் தெரிவித்துள்ளார். பூநகரி பள்ளிக்குடா பகுதியில் விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்ட பாரிய அதிரடித் தாக்குதலில் சிறீலங்கா இராணுவத்திற்கு ஏற்பட்ட இழப்புக்களையும், தோல்விகளையும் ஈடுசெய்யும் ஒரு முயற்சியாகவே 'அதிவேக அதிரடித் தாக்குதல்' என்ற நடவடிக்கையை சிறீலங்கா இராணுவம் மேற்கொண்டது. தமிழீழ விடுதலைப் புலிகளின் புதிய யுத்த தந்திரோபாய நடவடிக்கைகளினால் இம் முயற்சி தோல்வி அடைந்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அச்சுத்தெளிவின்மை காரணமாக இச்செய்தி மறுபிரசுரமாகிறது. ஆ-ர்) ■

மட்டு — காக்காச்சிவெட்டை

# கடத்தப்பட்ட தமிழர் பலரின் உருக்குலைந்த சடலங்கள் மீட்பு

மட்டக்களப்பு - காக்காச்சிவெட்டை கிராமத்திலிருந்து சிறீலங்கா படையினரால் கடத்திச் செல்லப்பட்டு காணாமல் போனதாகக் கருதப்படும் 40 தமிழர்களில் பலரது சடலங்கள் உருக்குலைந்த நிலையிலும், எரிந்த நிலையிலும் கிடக்கக் காணப்பட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாத பிற்பகுதியில் இக்கிராமத்தைச் சுற்றி வளைத்த சிறீலங்காப் படையினர் 90 க்கும் மேற்பட்ட தமிழ் மக்களைக் கடத்திச் சென்ற பின் 49 பேரை விடுதலை செய்தனர். ஏனையோர் பின் காணாமல் போய்விட்டனர்.

காணாமல் போய்விட்டதாகக் கூறப்பட்ட பலரது சடலங்களை உருக்குலைந்த நிலையிலும், எரிந்த நிலையிலும் தாங்கள் கண்டதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர். இது குறித்து சிறீலங்கா ஜனாதிபதிக்கும் மகஜர் அனுப்பியுள்ளனர்.

ஏற்கனவே இதுகுறித்து காணாமல் போனோரின் உறவினர்கள் சர்வதேச மன்னிப்புச் சபை பிரதிநிதிகளிடம் நேரில் முறையிட்டு ஏனையோரை மீட்டுத் தருமாறு கோரியுள்ளனர். ■

## குடியேற்ற மக்களுக்கு நல்லின ஆடுகள்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினரால் தென்மராட்சியிலுள்ள அப்துல்லா குடியேற்ற மக்களுக்கு நல்லின ஆடுகள் வழங்கப்பட்டன. இவ் ஆடு வழங்கலை தென்மராட்சிக் கோட்ட தளபதி பரணி ஆரம்பித்து வைத்தார். இக் குடியேற்றத்தைச் சேர்ந்த 22 குடும்பங்களுக்கு ஒரு நல்லின ஆடு வீதம் 21 மறியாடுகளும் அவற்றினைச் சினைப்படுத்தவென ஒரு கடாவும் கொடுக்கப்பட்டது. இந்த ஆடு வழங்கலானது யாழ் மாவட்டம் எங்கும் நல்லின ஆடுகளை பெருக்கும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகத்தின் திட்டத்திற்கு அமையவே இடம்பெற்றது. ■

# இராணுவம் - நாசகார சக்திகள் தமிழ் மக்களை அழிக்க கூட்டுச்சதி

■ விழிப்பாக இருக்க புலிகள் வேண்டுகோள்

சிங்கள இராணுவத்துடன் இணைந்து நாசகார சக்திகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் அழிவு வேலைகளில் ஈடுபட திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளதாக விடுதலைப் புலிகளின் பிரமுகர் திரு பொற்கோ தெரிவித்துள்ளார். மேலும், அவர் இச்சதித்திட்டங்களை முறியடிக்க மக்கள் புலிகளுடன் ஒத்துழைக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

அண்மையில் கோண்டாவிலில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைச் செயலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டிலேயே திரு பொற்கோ இவ்வாறு தெரிவித்தார். அண்மையில் சிறீலங்கா இராணுவத்தால் ஓமந்தை சேமமடு பகுதியில் புதைக்கப்பட்டவென கொடுக்கப்பட்ட வெடிப்பொருட்களைக் காண்பிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேபோன்ற சம்பவங்கள் மேலும் நிகழலாம். இதுபற்றி பொதுமக்கள் மிகவும் எச்சரிக்கையாகவும் விழிப்புடனும் செயலாற்ற வேண்டும். இவை பற்றிய சந்தேகங்களை எமக்கு உடனடியாக அறியத்தரல் வேண்டும். அரசின் திட்டமிட்ட இ[illegible] நாசகாரச் செயலுக்கு உடந்தையாகாது எமக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், சிறீலங்கா அரசு தமிழ் மக்களை கொலை செய்வதற்கு பல நாசகாரத் திட்டங்களைத் தீட்டிவருகின்றது. இதற்கு கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கொம்படி இறங்குதுறைப் பகுதியில் நடைபெற்ற குண்டு வெடிப்புச் சம்பவமும், அண்மையில் கோதுமை மாப் பொதிக்குள் வைத்து அனுப்பப்பட்ட அதிசக்தி வாய்ந்த வெடிப் பொருட்களும் சான்றுகளாகும்.

இதேபோன்ற சில வெடிப்பொருட்கள் எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் சில நாசகார சக்திகளால் எடுத்து வரப்பட்டுள்ளதாக எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. இத்தகைய தீய சக்திகளின் நடவடிக்கைகளிலி[illegible] கொண்டு [illegible] இதற்கு விடுதலைப் புலிகள் பொதுமக்களின் பூரண ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். ■





உள்ளூர் உணவு உற்பத்தித் திட்டங்களையும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம் நடாத்தி வருகின்றது. பெண்கள் உணவு தயாரிப்பில் ஈடுபட்டிருப்பதை படம் காட்டுகிறது.

## பால் வெல்ல உற்பத்தி கிளிநொச்சியில் வெற்றி

■ மாதாந்தம் ஒன்றரை இலட்சம் கட்டிகள்

கிளிநொச்சி மாவட்டத்தில் பால்வெல்லம் உற்பத்தி செய்யும் திட்டம் பெரு வெற்றி அளித்துள்ளது. இக் கைத்தொழிலை கிராம மட்டத்தில் விரிவுபடுத்துவதற்கான முயற்சியில் கிளிநொச்சி மாவட்ட தமிழீழ ஆய்வு நிறுவனம் இப்போது ஈடுபட்டுள்ளது.

கனகபுரம், அம்பாள் நகரம், விநாயகபுரம் ஆகிய இடங்களில் பால்வெல்ல உற்பத்தி அதிகரித்துள்ளது. இப்பகுதிகளில் மாதம் ஒன்றுக்கு ஒன்றரை லட்சம் பால் வெல்லக்கட்டிகள் உற்பத்தியாவதாக அறிவிக்கப்படுகிறது.

பால்வெல்ல உற்பத்தியால் பசும் பால் வீணாகாமல் தடுக்கப்பட்டு கால்நடை வளர்ப்போருக்கு நல்ல சந்தை வசதி உருவாக்கப்பட்டுள்ளது. அத்தோடு இது வரை 25 பெண்கள் வேலை வாய்ப்பையும் பெற்றுள்ளனர். ■



தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினரால் ஓலைக் கைத்தொழிலை இலகுவாக்குவதற்காக செய்யப்பட்ட உள்ளூர்இயந்திரத்தை தொழிலாளி ஒருவர் இயக்குவதை காணலாம்.

கோப்பாய் மாதிரிப் பண்ணையில்

## சூரியகாந்தி, ஆமணக்கு எண்ணெய் வித்து உற்பத்தி

தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் கோப்பாய் மாதிரிப் பண்ணையில் சூரியகாந்தி, ஆமணக்கு ஆகிய எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

இங்கு உற்பத்தி செய்யப்படும் எண்ணெய் வித்துக்கள் 92/93 பெரும்போகச் செய்கை காலத்தின்போது விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும்.

சூரியகாந்தியில் [illegible] பெரடோரிகா ஆகிய வர்க்கங்களும், ஆமணக்கில் [illegible] வர்க்கமும் விதை உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

100 கிலோ சூரியகாந்தி விதையிலிருந்து [illegible] கிலோ எண்ணெய் எடுக்கலாம். கொலஸ்ரோல் அற்ற சூரியகாந்தி எண்ணெயை உணவாகவும் மாஜரின் தயாரிப்புக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அத்துடன் சூரியகாந்திப் பருப்பை பச்சையாகவோ அல்லது வறுத்தோ உண்ணலாம்.

சூரியகாந்தி விதையிலிருந்து எண்ணெய் பெறப்பட்டதன் பின் மிஞ்சும் பிண்ணாக்கு சிறந்த கால்நடைத் தீவனமாகும் என்றும், சூரியகாந்தி எண்ணெய் பல கைத்தொழில் தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது என்றும் தமிழீழ ஆய்வு நிறுவனம் தெரிவிக்கிறது. ■

### மகசீன் சிறைச் சாலையில் 828 பேர் களுத்துறைச் சிறையில் 604 பேர்

கொழும்பு மகசீன் சிறைச்சாலை, களுத்துறைச் சிறைச்சாலை ஆகியவற்றில் முறையே 828, 604 தமிழர்கள் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் பணியகம் அறிவித்துள்ளது. இந்த 1432 பேரில் பலர் 1988-90 ஆண்டுகளுக்கிடையில் கைது செய்யப்பட்டு எதுவித விசாரணையுமின்றி காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

Tamileelam Archive

# ஒன்றுமாறி ஒன்றாகத் தீராத துன்பங்கள

நெடிது வளர்ந்த தென்னை மரங்கள். ஆனால் பள்ளக் காணி. சுமார் ஐம்பது குடிசைகள் அருகருகே அமைக்கப்பட்டுள்ளன. பிறந்த மேனியாக அங்குமிங்கும் ஓடித்திரியும் சிறுவர்கள். அந்தக் குடிசைப் பிரதேசத்தினுள் நுழைகிறேன். நேரம் பிற்பகல் 5-30 மணி. வானத்தில் மழை மூட்டம் இருட்டும் நேரம். 38 வயதுடைய குடும்பத்தவர் ஒருவர் தம் குடிசை தாழ்வாரத்தில் அம்மியில் சம்பல் அரைக்கிறார்.

என்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறேன். சம்பல் அரைத்த கையுடன் பாரும் தம்பி, எப்படியான கல்வீட்டில் சகல வசதிகளுடனும் வாழ்ந்த எமக்கு இன்று இந்த நிலை. இது கூட எத்தனை நாளைக்கு நிலைக்குமோ...? என்று பெரு மூச்சு விடுகிறார். இளவாலை உயரப்புளத்தைச் சேர்ந்த பொ. சின்னராசா.

என்ன தொழில் செய்கிறீர்கள் இப்போது? -என்றேன். இப்போது சம்பல் அரைக்கிறேன்! தெரியவில்லையா.? -என நகைச் சுவையாகக் கூறிவிட்டு -

தொழிலா கேட்கிறீர்கள்? எனது ஊரில் சொந்தமாக தோட்டங்கள், வயல்கள் இருந்தன. அவை எல்லாம் இழந்துவிட்டு, இங்கு வந்து கூலிவேலை, உழவு, வயல் வேலைகளுக்கு செல்கிறேன். அதுவும் எல்லா நாட்க

ளும் கிடையாது. கிடைக்கும் வருமானம் எனது குடும்பம் ஒருநேர சோறு சம்பலுடன் சாப்பிடத்தான் போதும். இரவு உணவுக்கு சம்பல் அரைக்கிறேன் - என்றார் அவர்.

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள அகதி முகாமில் வாழ்பவர்களின் நிலையை நேரில் கண்டறியும் நோக்குடன் மானிப்பாயில் உள்ள அகதிமுகாம் ஒன்றிற்குச் சென்றபோதுதான் அவரைச் சந்தித்தேன்.

தத்தம் சொந்த வீடுகளில் சகல வசதிகளுடனும் வாழ்ந்து சத்தான உணவு உண்டு, நிம்மதியாக வாழ்ந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இன்று வீடு வாசல், நிலபுலன்கள், சொத்துக்களை இழந்து உடுத்த உடையுடன் ஓடி

வந்து அகதிமுகாம்களில் ஒருநேர உணவுக்குக் கூட வழியின்றி வாழும் பரிதாபநிலையை இப்பிரதேசத்தில் காண முடிகிறது.

யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்து வரும் இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து 207 அகதிமுகாம்களில் 14460 குடும்பங்களைச் சேர்ந்த 62 729 பேர் வரண்ட வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். (இடம் பெயர்ந்து உறவினர்களோடும் நண்பர்களோடும் தெரிந்தவர்கள் வீடுகளிலும் வாழ்வோர் எண்ணிக்கை இதில் சேர்க்கப்படவில்லை)

இவர்களில் வலிகாமம் மேற்கு சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மட்டும் 37 முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. 3, 904 குடும்பங்களைச் சேர்ந்த 15, 445 பேர் இம்முகாம்களில் தங்கியுள்ளனர். குடாநாட்டின் சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் மிகக் கூடுதலான முகாம்கள், குடும்பங்களை, மக்களை அகதிகளாக் கொண்டுள்ள பிரிவு சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவாகும்.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம். சிறுவர் பாதுகாப்பு நிதியம்.

செஞ்சிலுவைச் சங்கம், தென் இந்திய திருச்சபை, மனித முன்னேற்ற நடுநிலையம் போன்ற பொது நிறுவனங்கள் இவர்களுக்கு வேண்டிய ஒரு சில வசதிகளை செய்து கொடுத்து வருகின்றன.

## சமூக சேவை செய்யும் மூதாட்டி

குடிசை வாசலில் குறுக்குக் கட்டுடன் குந்தி இருந்து பெட்டி இழைக்கின்ற இளவாலை கப்பன் சோதி (வயது 68) யிடம் என் கவனம் சென்றது.

"என்ன பெட்டி வியாபாரமா?" என்றேன்.

நிமிர்ந்து பார்த்த அம்மூதாட்டி, "தம்பி, இங்கு யாருக்கு மோனை வியாபாரம் செய்கிறது? எல்லாரும் அகதிகளாக வந்துள்ளோம். என்னால் முடிந்த உதவியாக குடிசைகளில் உள்ளவர்களுக்கு பெட்டி இழைத்துக் கொடுக்கிறேன் -என்றார்"

## மருந்துக்குப் பதில் மந்திரம்

தள்ளாத வயதிலும் உற்சாகத்துடன் செயற்பட்டு பிறருக்கு உதவும் இம் மூதாட்டியின் பொதுச் சேவை மனம் எங்களில் எத்தனை பேருக்கு உண்டு...? என்ற மனக் கேள்வியுடன் அடுத்த குடிசையை நோக்குகிறேன்.

குடிசை வாசலில் மக்கள் கூட்டம். வலிப்பு வந்த தங்கராசா இரத்தினம் என்பவருக்கு 'பெந்திக்கோஸ்' மதத்தவர்கள் நோய் மாற மந்திரம் செபிக்கின்றனராம். வலி வந்தவரை செஞ்சிலுவைச் சங்க உதவியுடன் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் சேர்ப்பதற்கு அம்புலன்ஸ் உதவி கோரப்பட்டதாகவும் டீசல் இல்லை எனக் கூறி அம்புலன்ஸ் தரப்படாமையால் நோயாளியை கைத்தாங்கலாக நவாலி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்று

முதலுதவி வைத்தியம் செய்து வலி குறைந்தபின் கூட்டி வந்ததாகவும் தெரிவித்தார்கள். அந்த நோயாளி பெந்திக்கோஸ் மதத்தவர்களாகையால் மந்திரத்தால் நோயை மாற்ற மந்திர ஜெபம் ஜெபிக்கப்படுவதாகவும் கூறினார்கள்.

## நோய்கள் பரவுகின்றன

முகாம்களில் சரியான படி சுகாதார வசதிகள் பேணப்படாமையால் நோய்கள் பரவி வருகின்றன. வயிற்றோட்டம் காரணமாக வைத்தியன் பாரு (வயது 65) என்பவர் முகாமில் இறந்துள்ளார். சிறு குழந்தைகளுக்கும் வயிற்றோட்டம் தீவிரமாகப் பரவி வருகின்றது. செஞ்சிலுவைச் சங்கத்தினர், சுகாதார

சேவைகள் பிரிவினர் வயிற்றோட்டத்துக்கான "ஜீவனி" பானம் வழங்கி வருகின்றனர். இருப்பினும் வயிற்றோட்டம், கண்நோய், நெருப்புக்காய்ச்சல், சின்னமுத்து போன்ற நோய்கள் அதிகமாகக் காணப்படுகின்றன.

கல்வி, சுகாதாரம் போன்றவற்றைக் கவனிக்கவும், ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கவும் முகாம்களில் உள்ள படித்த பயிற்சி பெற்ற சில யுவதிகளை ஒழுங்கு செய்துள்ளனர்.

வசதிகள் சில செய்யப்பட்டாலும் இன்னல், கவலைகள் குறையவில்லை.

நாற்பத்து நான்கு குடிசைகளைக் கொண்ட சச்சி முகாமில் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் பதினொரு மலசல கூடங்களை "ட்ரம்" வைத்து அமைத்துக் கொடுத்துள்ளது. ஆனால் அவை நிரம்பி விட்டமையால் சிறுசிறு புழுக்கள் வெளிவந்து கால்களில் கடிப்பதாக சச்சி முகாமில் உள்ள பண்டத்தரிப்பு சாந்தையைச் சேர்ந்த சற்குணம் ஆறுமுகம் என்ற குடும்பத்தலைவி குறைப்பட்டுக் கொண்டார்.

சாந்தை, சில்லாலை மேற்கு, பண்டத்தரிப்பு, விளான், மாரீசன்கூடல், இளவாலை ஆகியவற்றைச் சேர்ந்த 68 குடும்பங்கள் சச்சி முகாமில் உள்ளனர். நுளம்பும், இலையான் தொல்லையும் இங்கு அதிகம். சுகாதாரப் பகுதியினர் இலையானை ஒழிக்க மருந்து தெளிக்க நுளம்பின் தொல்லை அதிகரித்து விட்டதாம்.

## பாலர் பாடசாலை

இத் தொல்லைகளின் மத்தியிலும் கூட பிள்ளைகளின் கல்வி பாதிப்படைந்து இழந்துவிடக் கூடாது என்ற எண்ணத்தில் பாலர் பாடசாலை ஒன்றை ஆரம்பித்து கல்வி புகட்டுகிறார் செல்வி ஆறுமுகம் கனேஸ்வரி. 27 குழந்தைகளுக்கு கல்வி

போதிக்கப்படுகிறது. காலை 8-0[0] மணி முதல் 11-00 மணிவரை வகுப்புகள் நடைபெறுகின்றன. பல முகாம்களில் பாலர் பா[ட]சாலையை நடத்த உற்சாகம் இருப்பினும் பாடசாலை நடத்த[க்] கூடிய இடவசதி இல்லாமை பெரும் குறைபாடாகும்.

மாதகல், பண்டத்தரிப்பு, சாந்தை கிராமங்களில் கட[ல்] தொழிலில் ஈடுபட்டிருந்த ப[ல] குடும்பங்கள் கல்லூரி முகாம் ( இல் தங்கியுள்ளனர். வேலனை போன்ற தீவக பகுதிக் கடலுக்[கு] சென்று இறால் பிடித்து விய[...]



## அகதி முகாம் வாழ்க்கையின் அவலங்கள்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive





பாரம் செய்து வந்தவர்கள் இன்று தொழிலின்றி வாடுகின்றனர். சாந்தை கிராமத்தைச் சேர்ந்த செல்வச்சந்திரன் அழகேந்திரனுடன் உரையாடிய போது சுவையான தகவல்கள் கிடைத்தன.

அவர் சொன்னார்-

தீவகத்தை இராணுவம் சூழ்ந்திருப்பதால் இப்போ நாம் அங்கு தொழில் செய்வதில்லை. பொன்னாலை கடலில் பின்னர் இறால் பிடித்தோம். வலந்தனையில் இராணுவம் முகாம் இட்டதுடன் அங்கும் செல்வதில்லை. இப்போது நாவாந்துறையில் உள்ள தாழக்கடல் பகுதிக்கு மட்டுமே செல்கிறோம். ஏனைய இடங்களைப் போல அங்கு இறால் படுவதில்லை. சராசரியாக தினம் இரண்டரைக் கிலோ இறால் பிடித்து நாவாந்துறை, காக்கைதீவு சந்தைகளில் விற்கிறோம்.

நேரில் பார்த்து எழுதியவர் - "விஸ்வபாரி"



## சொறித் தண்ணீர் நோய்

நாவாந்துறை தாழக் கடல் பகுதியை நாம் சொறிக்கடல் எனக் கூறுகின்றோம். இக் கடல் நீரில் சொறித்தன்மை அதிகம் உண்டு. சொறித்தண்ணீர் உடம்பில் சொறியும்போது சில வேளைகளில் மரணமும் சம்பவிக்கிறது. சொறிக்கடல் நீர் உடம்பில் ஊறியவுடன் தோலில் அரிப்பு உண்டாகிறது. நகக் கண்களில் ஊசி குத்துமாப் போல் நோவு ஏற்படுகின்றது. வாயால் இரத்த வாந்தி வருகின்றது. சில சமயங்களில் மரமும் சம்பவிக்கின்றது. இந்நோய் கண்டவர்கள் நோய் உபாதை தாங்கமுடியாமல் விசத்தை அருந்தி தற்கொலை செய்ய முயன்றார்கள். ஆனால் ஆச்சரியப்படும்படியாக விசம் மனிதனை கொல்வதற்குப் பதிலாக மருந்தாக மாறி சொறித் தண்ணீர் நோயைக் குணப்படுத்தியுள்ளது. இது அனுபவ ரீதியாக உணரப்பட்ட உண்மை.

இந் நோய் வராமல் என்ன பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்கிறீர்கள் எனக் கேட்டேன். கடலில் இறங்குமுன் தேகத்தைச் சுற்றி சாக்கு, பிளாஸ்ரிக், பொலித்தீன் உறைகளாலும், தோல் ஆடைகளாலும் மூடிக்கொள்கிறோம். தோல்ச் சப்பாத்துக்களை அணிகின்றோம். இவை ஓரளவு பாதுகாப்பை தருகின்றன என்றார் அவர்.





# திருமலையில் கைதாகும்
# தமிழ் இளைஞர் யுவதிகள்
# காணாமல் போவது வழமையான சம்பவமாகும்

■ அழிந்த நிலையில் கோணேஸ்வரர் ஆலயம்

இயற்கைத் துறைமுகமும், இயற்கை அழகும், பாடல் பெற்ற தலமும் உள்ள திருகோணமலை இன்று பரிதாபமான முறையில் காட்சியளிக்கிறது.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள தமிழ்க் கிராமங்கள் அனைத்திலும் இன்று துரிதமான சிங்களக் குடியேற்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திருமணம் செய்யாத தமிழ் இளைஞர், யுவதிகள் இன்று திருமலையில் வசிக்க முடியாது. அப்படி யாரும் வசித்தால் அவர்களை முஸ்லீம் ஊர்காவல் படையினரும், இராணுவத்தினரும் கைது செய்து கொண்டு போய் என்ன செய்கிறார்கள் என்று தெரியாத நிலைமை இப்பகுதி தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் இப்பகுதியில் இளைஞர், யுவதிகள் ஒருவருமே இல்லை என்றளவுக்கு சிறுவயதிலேயே எல்லோரும் திருமணம் செய்து கொள்கின்றனர். இந்தக் கிராமங்களிலேயே பெரும் தொகையான இந்து சமயத்தவர்கள் முஸ்லீம்களாக கட்டாயப்படுத்தப்பட்டு மதமாற்றம் செய்யப்பட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### திருகோணமலை நகரம்

திருகோணமலை நகரத்திற்குள் பிரவேசிக்கும் எல்லாப் பாதைகளிலும் பொலிசாரின் சோதனை [illegible] சோதனைக்குப் பின்பே யார் என்றாலும் நகர எல்லைக்குள் பிரவேசிக்க முடியும். யாழ் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றால் சோதனைகள் மிகக் கடுமையாக இருப்பதுடன் சரியான ஆதாரங்கள் இருந்தால் மட்டுமே நகரத்திற்குள் பிரவேசிக்க முடியும்.

புகையிரத நிலையம், பஸ் நிலையம் போன்ற முக்கிய இடங்களிலெல்லாம் ஆயுதம் தரித்த பொலிசார் இரவு பகலாக நிறுத்தப்பட்டிருப்பதுடன் இராணுவத்தினரின் ரோந்தும் அடிக்கடி இடம் பெறும்.

நகர எல்லைக்குள் கூடுதலாக தமிழ் மக்களே வசிக்கிறார்கள். நகர எல்லைக்கள் உள்ள தமிழ் மக்களின் பல வியாபாரத் தலங்களும், வீடுகளும், சிங்களவர்களினாலும், முஸ்லீம்களினாலும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. நகர எல்லைக்குள் தமிழ்மக்கள் கூடுதலாக வாழ்ந்தாலும், இவர்களும் ஒரு வகை அச்ச உணர்வுடனேயே வாழ்ந்து வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள எந்த ஒரு இடத்திலும், ஒரு அசம்பாவிதம் நடைபெற்றால் நகர எல்லைக்குள் வசிக்கின்ற அத்தனை தமிழ் மக்களும் அடுத்த நாள் அதிகாலை ஒலி பெருக்கி மூலம் இராணுவத்தினரால் முற்றவெளி மைதானத்துக்கு அழைக்கப்படுகின்றனர்.

காலை 6 மணியிலிருந்து மாலை 3 மணிவரை, கால் கடுக்க உணவு எதுவுமின்றி முற்ற வெளி மைதானத்தில் கூடி நின்ற தமிழ் மக்கள் அனைவரும், இராணுவத்தினரின் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்படுகிறார்கள்.

இச்சம்பவம் அடிக்கடி நடைபெறும். இந்த 'ரவுண்ட்டப்' பின் போது இராணுவத்தினரினால் கைதுசெய்யப்படும் தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் காணாமல் போவது சர்வசாதாரணமாக உள்ளதுடன் எத்தனையோ தாய் தந்தையர்கள் இன்று தமது பிள்ளைகளை இழந்து பரிதவிக்கின்றனர்.

இராணுவத்தினரால் பாதை காட்ட என அழைத்துச் சென்ற பல நடைபாதை வியாபாரிகள் இன்று எங்கே இருக்கின்றார்கள். இவர்களுக்கு என்ன நடந்தது என்று கூட தெரியாமல் இவர்களின் குடும்பத்தினர் ஏங்கித் தவித்தவண்ணம் உள்ளனர்.

நகர எல்லைக்குள் கூட இன்னும் இடிந்த கட்டடங்களும், வீடுகளும் எரிந்த கொட்டில்களும் காட்சியளிக்கின்றன.

திருகோணமலை மாவட்டத்திலும் நகர எல்லைக்குள்ளும் பல பிரசித்தி பெற்ற ஆலயங்கள் இன்று எரிந்த நிலையிலும் இடிந்த நிலையிலும் காட்சியளிக்கின்றன. நகர எல்லைக்குள் இருக்கின்ற ஆலயங்கள் கூட இன்னும் திருத்தியமைக்கப்படாமல் இருப்பது வேதனைக்குரிய விடயமாகும்.

நகர எல்லைக்குள் இருக்கும் அனைவரும் இராணுவத்தினரால் விநியோகிக்கப்பட்ட அடையாள அட்டைகளை வைத்திருக்க வேண்டும். இந்த விசேட அடையாள அட்டைகள் இன்றி எவரும் இங்கு வசிக்கமுடியாது. ஒவ்வொரு குடும்பத்தினரும் தமது வீட்டில் வசிக்கின்ற குடும்ப அங்கத்தவர்களின் பெயர், விபரம் அடங்கிய பட்டியலை வீட்டின் முகப்பில் தொங்க விட வேண்டும். குடும்ப விபரம் அடங்கிய பட்டியலில் உள்ளவர்களைத் தவிர ஏனைய எவரும் அந்த வீட்டில் தங்கவோ, இருக்கவோ முடியாது. அப்படி ஒருவர் தங்க வேண்டும் என்றால் முன்கூட்டியே இராணுவத்தினரின் அனுமதி பெற்றே வீட்டில் தங்க வேண்டும். இரவு நேரங்களில் இப்பகுதி மயான அமைதி போலவே காட்சியளிக்கிறது.

### கோணேசர் ஆலயம்

இலங்கையிலுள்ள பாடல் பெற்ற தலங்களுள் மிகப் பிரசித்தி பெற்றதும் பழமை வாய்ந்ததும் திருகோணமலையில் எழுந்தருளியுள்ள திருக்கோணேசர் ஆலயம் ஆகும். இன்று இந்த பாடல் பெற்ற திருத்தலம் சிங்களக் காடையரின் தாக்குதலுக்குள்ளாகி ஒரு பகுதி எரிந்த நிலையில் இராணுவத்தினரின் முற்றுகைக்கு உள்ளாகி இருக்கிறது. ஆலயத்தின் முன்பகுதி தீ மூட்டி எரிக்கப்பட்டுள்ளது. ஆலயத்தின் விலைமதிக்க முடியாத தளபாடங்களும் விக்கிரகங்களும் சேதமடைந்துள்ளன. ஆலயத்தின் பிரதமகுரு வசித்த இல்லம் சேதமாக்கப்பட்டுள்ளது. ஆலயத்தைச் சுற்றிலும் இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர். ஆலயத்தின் எல்லைக்குள் இராணுவத்தினரின் பல முகாம்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

நாள் ஒன்றுக்கு ஐந்து காலப் பூசைகள் நடைபெற்ற ஆலயத்தில் இன்று ஒரு காலப் பூசை கூட நடைபெறுவதில்லை. பல மாதக்கணக்காக பூட்டிக் கிடந்த ஆலயம் கடந்த சில மாதத்திற்கு முன்புதான் திறக்கப்பட்டது. ஆலயத்தைத் திறந்தும் பூசைகள் எதுவும் நடைபெறுவதில்லை.

வடக்கு - கிழக்கு மாகாணசபையின் முயற்சியினால் ஒவ்வொரு நாளும் காலை 6.30 மணிக்கு மட்டும் ஜீப் வண்டியில் ஆலயத்தின் திறப்புக் கோர்வைகளை வைத்திருக்கும் சட்டத்தரணி ஒருவரும் ஆலய பிரதம குருவும் ஆலயத்தை துப்பரவு செய்வதற்கு தொழிலாளி ஒருவரும் மூன்று அல்லது நான்கு பொது மக்களும் ஆலயத்திற்குச் செல்வார்கள். இராணுவத்தினரின் அனுமதிக்குப் பின்பே ஆலயத்திலுள்ளே பிரவேசிக்க முடியும். கோணேசருக்கு பூசைகள் எதுவும் நடைபெறமாட்டாது. விளக்குகள் மட்டும் ஏற்றப்படும். இதேபோல ஆலயத்திலுள்ளே இருக்கும் சகல தெய்வங்களுக்கும் விளக்கு மட்டுமே ஏற்றப்பட்டு பின்பு கற்பாறைகளின் மீதுள்ள மரத்திற்கும் கோணேசர் அமர்ந்திருந்த இடம் எனக்கருதப்படும் இடத்திற்கும் பிரதம குருவினால் அபிசேக ஆராதனைகள் மேற்கொள்ளப்படும்.

ஆலயத்திலுள்ளே ஜீப் வண்டியைத் தவிர வேறு எந்த நேரத்திலும் எவரும் செல்வதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். பொதுமக்கள் விசேட தினங்களிலும் வெள்ளி, செவ்வாய் போன்ற நாட்களிலும் முற்ற வெளி மைதானத்திலிருந்தே கோணேசரைத் தரிசிக்கும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஆலய வளவிற்குள் இராணுவத்தினரின் பல பாதுகாப்பு அரண்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கோணேசருக்கு ஐந்து காலப் பூசை எப்போது நடைபெறும்? எப்போது நாம் எல்லாம் சென்று தரிசிக்கப் போகின்றோமோ என்று இங்குள்ள மக்கள் ஏங்கித் தவித்தவண்ணம் உள்ளனர். ■

### குடிசைகள் போதாது

இரவு நேரத்தில் அகதிமுகாம் குடிசைகள் நிலைமை அறிய மானிப்பாய் உடுவில் வீதியில் உள்ள மருதடி விநாயகர் முகாமினுள் நுழைகின்றேன். கார்த்திகை விளக்கீடு போன்று குடிசை வாசல்களில் போத்தல் விளக்குகள் மினுங்குகின்றன. மருதடி விநாயகர் ஆலய மண்டபம், மடம் ஆகியவற்றில் தங்கி இருந்த மக்களுக்கு தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினர் குடிசைகள் அமைத்துக் கொடுத்துள்ளனர். மருதடியில் தாம் இருந்தபோது ஆலய வழிபாடுவோர் சங்கநிர்வாகிகள் நல்ல உதவி புரிந்ததாக அங்கு தெரிவித்தனர்.

பதினெட்டுக் குடும்பங்களுக்கென அமைக்கப்பட்ட குடிசைகளில் 48 குடும்பங்கள் வாழ்ந்ததாகவும் அதனால் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறினர். 48 குடும்பங்களின் சகல தேவைகளுக்கும் இங்கு ஒரே ஒரு கிணறுதான் உள்ளது. பற்றைகள் அழிக்கப்பட்டு அமைக்கப்பட்ட இம் முகாம்கூட பள்ளமான காணியில்தான் உள்ளது. இலையான், நுளம்பு தொல்லைகளுடன் இம் முகாமில் விசப்பாம்பு வருகையும் அதிகரித்துள்ளதாம். தாம் விசப்பாம்புகளை அடித்துக் கொல்வதாகவும் எந்நேரமும் பயத்துடன் வாழவேண்டியுள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

இவ்வாறு அகதி முகாம்களில் இன்னல்களுடனும், கவலைகளுடனும் வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழ் மக்களின் இந்த அவல நிலை என்று மாறுமோ...! ■

# அவரை ஒருமுறை சந்திக்க வேண்டும்

கு. ஐஸ்வர்யா

சிறுகதை

பேரிரைச்சலோடு தாழப்பறந்து மேலெழுந்த நொடிப் பொழுதில், என்ன நிகழ்ந்ததென்பதை உணர முதலே அவன் தூக்கி எறியப்பட்டான். துப்பாக்கியை இறுகப்பற்றிய வலது கரம் துண்டித்து பொத்தென விழுந்தது.

இருள்! இருள்! கனத்து மூடியது!

அவன் விழியைத் திறந்தபோது ஆறு நாட்கள் கழிந்திருந்தன. இரண்டு கரங்களையும் ஒரு விழியையும் அவன் இழந்திருந்த கொடுமை தெரிந்தது அதை அவன் உணர்ந்தபோது.

'ஐயோ...' என வீரிட்டலற முயன்றான். குரல் விம்மலாகத் தூரத்தில், தேய்ந்து ஒலிக்கும் போர்க்கள வேட்டாக வெளிவந்தது.

அவன் மார்பில் ஆதரவாகப் பதிந்த கரத்திற்குரிய இளவழகன் "நானிருக்கேன்ரா ரகு" என்றான் கனன்று கிளம்பிய ஆவேசத் துயரத்தை அடக்கியபடி.

'நான் அவரை ஒரு தடவை பார்க்க வேண்டும். ஒரே ஒரு தடவை... அதற்குப் பிறகு செத்துப்போகத் தயார், அழகு'. வார்த்தைகள் மெதுவாக ஏக்கத்தோடு நிலத்து ஊற்றாகக் கசிந்தன. "அழகு எனக்காக ஒரு கடிதம் எழுதடா."

* * *

அவர் தன்முன் வைக்கப்பட்டிருந்த கோவையைப் பிரித்தார். அவர் மேசையில் கடிதக் கோவையை வைக்கும்போது, முதற்கடிதமாக ரகுவின் கடிதத்தை எடுத்து முதன்மைப்படுத்தியிருந்த வழுதி, அவரைப் பார்த்தபடி நின்றிருந்தான். அது ஒரு பெரிய நீண்ட கடிதம். அவர் பொறுமையாக அதனைப் படித்தார். நெஞ்சை உருக்கிய இடங்கள் வரும்போது அவர் முகத்தில் தேங்கிய உணர்வலைகளை வழுதி அவதானித்தான்.

'நிச்சயமாக அவனை அழைத்து வா' என்பார் என வழுதி நினைத்தான்.

அவன் இறுதியாக எழுதியிருந்தான்.

'இந்த மண்ணின் மீட்பில் என் ஜுயிர் போயிருக்கில் எனக்கு ஒரு தீராத குறை இருந்திருக்கும். தங்களை ஒரு தடவையாவது சந்திக்காது போகிறேனே என்ற ஏக்கம் இருந்திருக்கும். இக்கடிதத்தை என் தோழன் இளவழகன் மூலம் எழுதுவித்துள்ளேன். ஒரே ஒரு தடவை உங்களை நான் பார்க்க வேண்டும். இந்த நாட்டின் யுகபுருசனை நான் நேரில் காண வேண்டும். அதன் பின் நான் என்னை அழித்துக் கொள்வேன். இருகரங்களும் ஒரு விழியுமில்லாத நானேன் வாழ்வான்?....'

அவர் அக்கடிதத்தை ஒதுக்கி அப்பால் வைத்தபோது, வழுதி கணம் துடித்துப் போனான். அவர் கதிரையிலிருந்து எழுந்தார்.

* * *

கதிரையில் அவன் துயரத்தோடு அமர்ந்திருந்தான். ஆறு மாதங்கள் ஓடி விட்டன. பதில் இல்லை. எத்தனை கடிதங்கள் எழுதினான். ஒன்றுக்கும் பதிலில்லை.

'இவ்வளவு கல்நெஞ்சா? அவரிடம் நான் என்ன கேட்டேன். ஒரு தடவை சந்திக்க அனுமதி அவ்வளவுதான்.'

இளவழகன் ரகுவின் அருகில் வந்தான். சன்னம் துளைத்த வாழையாகக் கருகிக் கொண்டிருக்கும் அவன் தோளில் கரம் பதித்தான். அந்த ஆதரவான கரத்தினை பற்றி ஆறமுடியாத ரகு நீர் சொரியும் விழியுடன் அக்கரத்தின் மீது கன்னத்தைச் சாய்த்துக் கொண்டான்.

'அழகு நீ இல்லாவிடில் நானில்லை. அம்பாறையில் பிறந்து இங்கை யாழ்ப்பாணம் வந்தன். இந்த மண்ணைக் காக்கும் தியாக வேள்வியில் உன்னோடை இணைந்து கொண்... எங்கு...

பனை நீ கவளம் கவளமாக உணவூட்டி, குளிப்பாட்டி... இந்த கைமாறை எப்பிறப்பில் நான் உனக்குத் திருப்பிச் செய்யப் போறன்.'

'விசரன் போலக் கதையாதை ... ரகு'

'உனக்கு நான் கஸ்டம் தரமாட்டன். அவர் மனமிரங்கி ஒரேயொரு தடவை தன்னைச் சந்திக்க அனுமதித்தால் மறுகணமே என்னை நான் அழித்துக் கொள்வேன்.'

'இப்படிக் கதையாதையடா ரகு. நான் இருக்கும் வரை நீ எதற்கும் கவலைப்படாதை.'

'ஒரு கடிதம் எழுதித்தா அழகு.'

'இது முப்பதாவது தடவை. சரி சொல்லு.'

* * *

அவர் அவனின் கடிதத்தை பொறுமையுடன் படித்தார். முகத்தில் உணர்வுக் கீறல்கள் தெளிந்ததை வழுதி அவதானித்தான்.

'... நான் என்ன தவறு செய்தேன்? உங்களை ஒரு தடவை சந்திக்க அனுமதி தாருங்கள். எனக்கு வாழ்க்கை வெறுத்துவிட்டது. என்னை நிம்மதியாகச் சாவதற்கு ஒரு சந்தர்ப்பம் தாருங்கள். நான் இன்று உயிர் வாழ்வதே உங்களைச் சந்திப்பதற்காகத்தான்...'

'இம்முறை நிச்சயமாக அனுமதி கிடைக்கும்' என வழுதி எண்ணிய அதே கணத்தில் அவர் அக்கடிதத்தையும் அப்பால் வைத்துவிட்டு மௌனமாக இருந்தார்.

* * * *

இளவழகன் வியப்படைந்தான். வலது கால் விரல்களிடையே பேனை ஒன்றினைப் பொருத்தி இடது பாதத்தால் அழுத்திப்பிடித்த தாளில் ரகு எழுத முயன்றுகொண்டிருந்தான்.

'என்னடா ரகு...?'

ரகு சிரித்தான். 'அவருக்கு கடிதம் எழுதுறன்.'

'இன்டைக்குக் காலில் கரண்டி பிடித்துச் சாப்பிட்டாயாமே.'

'ஓமோம். ஒரு மாதிரி நானே சமாளிப்பேன் போலிருக்கடா என்னால முடியும்.'

'கடிதம் எழுதி முடிச்சிட்டியா?'

ரகு, அவனைப் பார்த்து வெட்கத்துடன் சிரிக்க முயன்றான்.

* * *

அவர் அவன் கடிதத்தை வாசித்தார். முகத்தில் பரவிய மந்தகாசமான புன்னகையின் அர்த்தம் வழுதிக்குப் புரியவில்லை.

'பாவம் அவன் இக்கடிதமும் அப்பால் தள்ளப்படப் போகிறது' என்று எண்ணிக் கொண்ட முயன்ற வழுதிக்கு அவரின் வார்த்தைகள் வியப்பைத் தந்தன.

'ரகுவை அழைத்து வா வழுதி. அவனை நான் சந்திக்க வேண்டும்.'

காரணம் வழுதிக்குப் புரியவில்லை. ■

---

மன்னார் மாவட்டத்தில்

## லெப்கேணல் விக்டர் நினைவு எழுச்சிபூர்வமாக அனுஸ்டிப்பு

முன்னாள் மன்னார் மாவட்டத் தளபதி லெப்டினன் கேணல் விக்டர் மற்றும் 2ம் லெப் ரோம் ஆகியோரது ஆறாம் ஆண்டு நினைவு தினம் மன்னார் மாவட்ட மக்களால் மிகவும் எழுச்சி பூர்வமாக அனுட்டிக்கப்பட்டது.

முழங்காவில், பல்லவராயன் கட்டு மற்றும் சோலைக்கிராமங்கள் மஞ்சள், சிவப்பு நிறக்கொடிகளால் அலங்கரிக்கப்பட்டன. மேற்படி நிகழ்வின்போது அவ்வூர் மக்கள் பல விளையாட்டு நிகழ்ச்சிகளையும், கலை நிகழ்ச்சிகளையும் நடாத்தினர்.

அன்றைய தினம் காலை பிரதேசப் பொறுப்பாளர் திரு சௌந்தர் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றி வைத்ததுடன் நினைவு தின நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இதுவரை தமிழீழ விடுதலைக்காக தம்முயிர் தந்த மாவீரர்களினதும், பொதுமக்களினதும் நினைவாக மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து மாவீரன் தீபனின் தாயாரும், மாவீரன் லெப் அறிவுடையானின் சகோதரனும் ஈகைச் சுடரேற்றி வைத்தனர். மன்னார் மாவட்டத் தளபதி அமுதன் மாவீரர்களான விக்டர் மற்றும் ரோம் ஆகியோரின் உருவப்படங்களுக்கு மலரஞ்சலி செலுத்தியதைத் தொடர்ந்து போராளிகளும், பொதுமக்களும் உருவப்படங்களுக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

வீரச்சாவடைந்த விக்டர், ரோம் ஆகியோரின் நினைவு தினத்தில் முழங்காவில் பிரதேசத்திற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டப் போட்டி இடம்பெற்றது. இதில் நாச்சிக்குடா செல்வேந்திரன் அணி வெற்றி பெற்றது.

### விக்டர் எழுச்சிக் கிராமம்

விக்டர் எழுச்சிக் கிராம அங்குரார்ப்பண வைபவம் முன்னாள் மன்னார் மாவட்டத் தளபதி லெப் கேணல் விக்டர் வீரச்சாவடைந்த ஆறாம் ஆண்டு நினைவு நாளில் நடைபெற்றது. முழங்காவில் பிரதேசத்தில் உள்ள பல்லவராயன்கட்டு சோலை என்னும் இடத்தில் 50 ஏக்கர் நிலப்பரப்பில் 'விக்டர் எழுச்சிக் கிராமம்' உருவாக்கப்பட உள்ளது. இக்கிராமத்தில் 50 வீடுகள், விளையாட்டு மைதானம், சிறுவர் பாடசாலை, சிறுவர் பூங்கா ஆகியன அமைக்கப்பட உள்ளன.

பூநகரிப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களும், சோலைக் கிராமத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களுமாக 50 குடும்பங்களுக்கு 50 ஏக்கர் காணி வழங்கப்பட்டு இவ்வெழுச்சிக் கிராமத்தில் குடியமர்த்தப்பட உள்ளனர்.

இறுதியில் நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான மக்கள் இக்கூட்டத்தில் உணர்வு பூர்வமாக கலந்து கொண்டனர். இதில் முழங்காவில் பிரதேச மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி முத்துநகை உட்பட பல பிரமுகர்களும் உரையாற்றினர். ■

---

### அறிவு என்பதன் அர்த்தம்

"அறிவு' என்பதற்கு அர்த்தம் அல்லதான் உள்ளது. 'பொதுமக்களின் குடியிருப்பில் உள்ள பெறுமதி மிக்க சொத்துக்கள் அனைத்தும் சூறையாடப்பட்டது மட்டுமல்லாமல் பொதுமக்கள் குடியிருந்த வீடுகள் அனைத்தும் தினம் தினம் குண்டு வைத்து தகர்க்கப்பட்டு வருகின்றது.' இவ்வாறு மாதகல், இளவாலை ஆகிய இடங்களில் இராணுவத்தின் பிடியில் சிக்கியிருக்கும் பகுதியிலிருந்து விடுவிக்கப்பட்ட மாணவர் ஒருவர் தெரிவித்தார். ■

---

தொண்டர் நிறுவனம்

## நடமாடும் வைத்திய சேவை நடத்த முடியாது கஸ்டம்

■ எரிபொருள் எடுத்து வர தடை

தொண்டர் நிறுவனமான மனித முன்னேற்ற நிதியினைத் தான் நடத்தப்பட்டு வரும் நடமாடும் வைத்திய சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நடமாடும் வைத்திய சேவைக்குப் பயன்படுத்தப்படும் வாகனத்துக்குத் தேவையான எரிபொருள் மற்றும் பற்றரி போன்றவற்றை எடுத்துவருவதற்கு கட்டுப்பாட்டு படைத் தலைமையகம் அனுமதி வழங்க மறுத்துவிட்டமையே இந்த நிலைமைக்கு காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டில் உள்ள சகல அகதி முகாம்களுக்கும் சென்று அங்குள்ள மக்களுக்குச் சிகிச்சை அளிக்க இந்த நடமாடும் வைத்திய சேவை பெரிதும் உதவி வருவது குறிப்பிடத்தக்கது. ■

---

## யாழ் பல்கலைக்கழகத்தில் சித்திரம், சிற்பம் பயிற்சியளிப்பு

சித்திரம், சிற்பம், மலர் அலங்காரம், கோலம் போடல் போன்ற பல்வேறு துறைகளில் மாணவர்களுக்கு பயிற்சியளிக்க யாழ் பல்கலைக்கழகம் முடிவு செய்துள்ளது.

இப் பயிற்சி நெறிக்கு அடிப்படைத் தகமைகள் எதுவும் கிடையாது என்றும் மாணவர்கள் தாம் விரும்பிய நெறியைத் தெரிவு செய்து பயிற்சி பெறலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பயிற்சியை யாழ் பல்கலைக் கழக கலைப்பீடம் மேற்கொள்ள உள்ளது. இதற்கு இணைப்பாளராக திரு ஆர். சிவச்சந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். ■

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive






## மேஜர் தாரணி

எங்கள் தாரணியை எல்லோரும் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும். இவள் சின்ன வயதிலேயே பெரிய பொறுப்பினைச் சுமந்து நின்றாள். எமது தேசம் விடுதலை பெற வேண்டும் என்று துடித்தவள். கூடவே சகல நிலைகளிலும் பெண்கள் முன்னேற்றமடைய வேண்டும். சகல அடக்குமுறைகளையும் தகர்த்தெறிந்து எமது தேசத்தின் வாழ்வில் அவர்களும் சமமாக மதிக்கப்பட வேண்டும், என்பதற்காக அயராது உழைத்தவள்.

இவள் வீரச்சாவு அடைந்து ஒரு வருடத்திற்கு மேற்சென்றும், அவளைத் தெரிந்தவர்களுக்கு, அவளை நேசித்தவர்களுக்கு அவளின் மறைவு இன்றுதான், இந்த நிமிடந்தான் நடந்தது போன்ற ஏக்கம் அந்த உணர்வு, அவர்களுக்கே சொந்தமாகிப் போன ஒன்று.

அவள் எங்களுடன் இல்லை, என்ற அந்த உணர்வு ஒவ்வொரு நிமிடமும் நெஞ்சைத் தாக்க, தாரணி இந்த நேரம் இல்லாமல் போய் விட்டாளே.... என்றும், அவள் இருந்தால் இப்படி.. இப்படித்தான் இருந்திருப்பாள் என்றும், எங்களுக்குச் சந்தோசம், கவலை வருகின்ற நேரங்களில் எல்லாம் சொல்லிக்கொண்டிருக்கத்தான் எங்களால் முடிகின்றது.

அவளது இழப்பை மறக்க நினைத்தும் மறக்க முடியாமல், அவளது நினைவுகளுடன் ஒன்றிப்போய் அவளது கனவைச் சுமந்து கொண்டு அவளது பிள்ளைகள் இன்றும், என்றும்.......

விடுதலைப்புலிகள் மகளிர் படையணியின் முதலாவது பயிற்சி முகாமிலே இவள் இணைந்து பயிற்சி பெற்றாள். பயிற்சி முகாமிலே மிகவும் அமைதியான சுபாவத்தைக் கொண்டிருந்த தாரணி, எந்தக் கடினமான பயிற்சியையோ அன்றி வேலையையோ செய்து முடிக்கக் கூடிய அளவுக்கு மனவுறுதி படைத்தவளாகவும் இருந்தாள்.

இந்திய மண்ணில் பயிற்சியை முடித்துக் கொண்டு வந்தபின் மகளிர் படையணியினர் முதல் முதல் பங்கு கொண்ட மன்னார் அடம்பன் நேரடி மோதலில் மிகவும் திறமையாகச் செயற்பட்டாள். இச் சண்டையின்போது இவளது கையில் சிறிய காயமேற்பட்டது.

இதேபோன்று, இந்திய இராணுவம் எம்மண்ணில் காலடி வைக்கும்வரை சிறிலங்கா இராணுவத்துடன் நடைபெற்ற பல சண்டைகளிலே தாரணி பங்கு கொண்டு தன் ஆற்றலை வெளிப்படுத்தினாள்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் உருக்குலைந்து, இந்திய இராணுவத்துக்குஎதிரான தாக்குதல் ஆரம்பிக்கப்பட்ட போது, உலகின் வல்லரசு ஒன்றுடன் மோதி என்ன செய்ய முடியும், என்று பலர் திகைத்து நின்றபோது மிகவும் மனோவலிமையுடன் நின்று போரிட்டவள்.

இந்திய இராணுவத்துடன் குடா நாட்டுக்குள் நடந்த பல மோதல்களிலும், வன்னி, மணலாறு போன்ற இடங்களில் நடந்த பல மோதல்களிலும் இவள் பங்கு கொண்டிருந்தாள்.

மணலாற்றுக் காட்டுக்குள் இருக்கும் எந்த மரங்களுடன் பேசிப் பார்த்தாலும், அவை ஒவ்வொன்றும் தாரணியைப் பற்றிக் கதை கதையாகக் கூறும். ஒவ்வொரு நாளும் காட்டுக்குள் அவள் நடந்த தூரம் மிக அதிகம். இந்திய இராணுவத்தால் சுற்றி முற்றுகையிடப்பட்ட அந்தக்காட்டுக்குள் எங்கோ ஒரு மூலையிலிருந்து தங்களுக்குத் தேவையான பொருட்களைக் கொண்டு வருவதற்கு இவளும் இவளது தோழர்களும் பட்ட கஸ்டம் கொஞ்ச நஞ்சமல்ல.

இந்த நேரத்தில்தான் பெண்கள் துணிந்து இயங்க வேண்டும், அவர்கள் சுயமாகச் செயற்பட வேண்டும் என்று அனைத்து நிகழ்வுகளிலும் பெண்கள் தனித்துச் செயற்பட விடப்பட்டபொழுது மிகவும் ஆர்வத்துடனும் சுறுசுறுப்புடனும் செயற்பட்டாள்.

இவளுக்குக் கொடுக்கப்பட்ட வேலைகள் எவ்வளவு கடினமானதாக இருந்த பொழுதிலும் கூட அதைச் சிரித்துக் கொண்டே செய்து முடிப்பாள். அவளுடன் இருந்தவர்களையும் அவ்வாறே செய்யப் பழக்கினாள்.

இக்கால கட்டத்தில் புதிய பயிற்சி முகாம் ஆரம்பிக்கப்பட்டபோது இவள்தான் கூடுதலாகப் பிள்ளைகளைக் கூட்டிச் சென்று பொருட்களை எடுத்து வருவாள். இப்படித்தான் ஒரு நாள் இவள் பிள்ளைகளுடன் பொருட்கள் எடுத்து வந்து கொண்டிருந்த போது பெரிய யானை ஒன்று வழிமறித்தபடி நின்றது. உடனே அவள் துப்பாக்கியால் சுட்டு யானையைக் கலைத்து விட்டாள். தாரணி இப்படித் தான் என்ன பிரச்சனை என்றாலும் யோசித்துக் கொண்டு நிற்காமல் உடனே துணிந்து முடிவெடுத்துவிடுவாள்.

காட்டுக்குள் இருந்தபோது மிகவும் திறமையாகக் கண்ணிவெடி வைக்கக்கூடிய தாரணி, எந்தக் கடினமான பயிற்சியையும், வேலையையும் செய்யக்கூடிய தாரணி, திறமையாக சண்டை பிடிக்கக் கூடிய தாரணி இப்படித்தான் அவளை எல்லோருக்கும் தெரியும்.

மிகவும் அமைதியாக இருந்த தாரணி கலகலப்பானவளாக மாறியது, இந்தக் காட்டுக்குள் தான். அவள் இருக்கும் இடத்தில் எந்த நேரமும் சிரிப்புச் சத்தம் கேட்கும். என்ன கவலையுடன் இருந்தாலும் அவர்களைத் தனது கதையால் சிரிக்க வைப்பாள். இதனால் தாரணியின் தோழிகள் எப்போதும் அவளைச் செல்லமாக 'மாமி' என்று கூப்பிட்டார்கள். அவளுடன் அந்தக் காட்டில் இருக்காதவர்களுக்குப் பெரிய ஆச்சரியம். 'தாரணியா இப்படிக் கதைக்கிறாள், பகிடி விடுகிறாள்' என்று.

அவளுடன் நெருக்கமாகப் பழகாதவர்கள், அவள் தலையைச் சிலுப்பிக் கொண்டு கதைக்கும் விதத்தைப் பார்த்து 'சரியான முரடு' என்று சொல்வார்கள். அவள் கதைப்பதைப் பார்த்தால் முரடு மாதிரித்தான் இருக்கும். அந்த முரட்டுத்தனமான கதைக்குப் பின்னால் இருக்கும் அவளது ஈரமான இதயத்தை, அவளுடன் நெருங்கிப் பழகியவர்களுக்கு மட்டுமே தெரியும்.

எந்த இடத்திலும் சரியானதைச் சரியென்று வாதிடும் துணிவு மிக்கவள். ஏதாவது வேலை என்றால் 'முடியும்' அல்லது 'முடியாது' என்று மட்டுமே சொல்லுவாள். 'செய்து பார்ப்போம்' என்று ஒருபோதும் சொன்னதே கிடையாது. அதனால்தான் அவளால் பல இடங்களில் பிரச்சினைகளுக்கு மத்தியிலும் உறுதியாக நிற்க முடிந்தது.

இந்திய இராணுவம் எமது மண்ணை விட்டுப்போன பின், மீண்டும் இலங்கை இராணுவத்துடனான சண்டை தொடங்கிய போது பல தாக்குதல்களிலும் பங்கு கொண்டாள்.

கோட்டை இராணுவ முகாம் எமது முற்றுகையில் இருந்த போதும், பின்னர் பலாலியைச் [illegible] பொறுப்பாக இருந்தாள்.

வைத்தியசாலையில் ஒவ்வொரு பகுதிகளும் போய் 'தாரணியை எங்க விட்டிருக்குது' தாரணியை [illegible]

பலாலியைச் சுற்றியுள்ள ஒவ்வொரு குச்சொழுங்கைகளுக்கும் இவளைத் தெரியும். இவள் இங்கு இடையில் எழும்பாமல் தூங்கிய இரவுகளை விரல்விட்டு எண்ணலாம். இரவு எந்த நேரத்திலும் பிள்ளைகளின் நிலைகளுக்கு முன்னால் வெடிச்சத்தம் கேட்டால் இவள் அடுத்த நிமிடம் அந்த இடத்தில் நிற்பாள்.

நாங்கள் தனியாக நின்று அடிபட வேண்டும் என்ற கனவைச் சுமந்துகொண்டு பலாலி மண்ணைச் சுற்றிச் சுற்றித் திரிந்தவள் அந்த நினைவுடனேயே, அந்த மண்ணிலேயே விதையாகிப் போனாள்.

தான் உயிருடன் இருக்கும் வரை, பெண் போராளிகள் நிற்கும் பக்கத்தால் இராணுவம் வெளியேறினால், ஆண் போராளிகளை அந்த இடத்திற்கு வந்து அடிபட விட மாட்டாள். நாங்கள் தனியாகத்தான் நின்று அடிபட வேண்டும் என்று சொல்லிச் சொல்லியே பெண் போராளிகளை வளர்த்தவள். இன்று அவர்கள் தனித்துநின்று அடிபடும்போது அவர்களுடைய உணர்வுகளுடன் சேர்ந்து நிற்கிறாள்.

அந்த நாள் எமது நினைவுகளில் என்றுமே மறக்க முடியாமல் போய்விட்டது. 1991 ஜனவரி 23 ஆம் திகதி அதிகாலை 3.00 மணிக்குச் செய்தி வருகின்றது. 'தாரணி அக்காவுக்குக் காயம், வைத்தியசாலைக்கு அனுப்பியிருக்கின்றோம்' என்று.

'தாரணி காய்ச்சல், தலையிடியென்றால் கூடத் தாங்க மாட்டாள். காயத்தை என்னெண்டு தாங்கப்போறாளோ?' இப்படித்தான் எங்களால் நினைக்க முடிந்தது. எங்களின் தாரணி எங்களை விட்டு இவ்வளவு வேகமாகப் போவாள் என்று யாருமே நினைக்கவில்லை.

எங்க விட்டிருக்குது' என்று கேட்டால் ஒருவருக்குமே தெரியவில்லை. அப்பொழுதுதான் மெல்ல மெல்ல உண்மை தெரியத் தொடங்கியது. எங்கள் தாரணிக்கு நாங்கள் விரும்பாத, நாங்கள் நினைக்காத ஒன்று நடந்து விட்டது என்று. அவளைப் பற்றி நாங்கள் நிறைய நம்பிக்கைகளை வைத்திருந்தோம். எல்லாமே ஒரு கொஞ்ச நேரத்துக்குள் கனவாகப் போனதை யாராலும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

அவள் வீரச்சாவடைந்த செய்தி, முதலில் அவளது பிள்ளைகளுக்குத் தெரியாது. 'தாரணியக்காவுக்குச் சின்னக் காயமாம். அவ எங்களை விட்டுட்டு அங்கை நிக்க மாட்டா. எப்படியும் ரெண்டு மூண்டு நாளுக்குள்ள திரும்பி வந்து விடுவா' என்று தான் கூறிக்கொண்டு இருந்தார்கள். 'உங்கடை தாரணியக்கா உங்கடை இடத்துக்கு வரேலாத அளவு தூரத்திற்கு போய் விட்டா' என்று பின்னேரம் மெதுமெதுவாகச் சொல்லப்பட்டது. இப்பொழுதும் அவளது பிள்ளைகளது அழுகையொலி மறக்க முடியாது காதுக்குள் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

அவளால் வளர்க்கப்பட்ட அவளது பிள்ளைகள் இன்றும் அவளது பெயரைச் சொல்லிக் கொண்டு ஒவ்வொரு சண்டைக்கும் போவதற்கு ஆயத்தப்படுத்தும்போதும், 'எங்கட தாரணியக்கா இருந்தா உயிரோட இருந்திருந்தால்...' இதற்குப் பிறகு அவர்கள் வாயால் எதுவும் சொல்வதில்லை. ஏனென்றால் அவர்கள் சொல்ல வருவது அவர்களது முகத்திலும் பெருமூச்சிலும் நிறைந்திருக்கும்.

'நாங்கள் தனிய நிண்டு அடிபட வேணும்' என்ற இவளது கனவை எங்கள் செயல்களினூடாக நனவாக்கி வருகின்றோம். ■

■ துளசி

## மாவீரன் பண்டாரவன்னியன் 189 வது நினைவு தினம்

"வரலாறு எம்மைச் செம்மைப் படுத்துகிறது, சிறப்படுத்துகிறது." இவ்வாறு பண்டாரவன்னியனின் நினைவு விழாவில் முல்லை மணலாறு மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இரா-தமிழன்பன் தெரிவித்தார். பண்டாரவன்னியனின் இராசதானியாகிய கற்சிலைமடுவில் அவரின் 189 வது நினைவு தினம் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இதில் பெருந்திரளான மக்களும், பாடசாலை மாணவ மாணவியரும், ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் தொடர்ந்து பேசிய தமிழன்பன், தமிழீழத்தின் நிலங்கள் பண்டைய காலத்தில் பல தமிழ் அரசர்களால் ஆளப்பட்டு வந்தது. இந்த வகையில் வன்னி வள பூமியை ஆண்ட இறுதித் தமிழ் அரசனாகிய பண்டாரவன்னியன் ஆங்கிலேயரை எதிர்த்து உரிமைப் போராட்டத்தை நடத்தி தனது மண்ணிற்காக மரணித்தான். அந்த மாவீரனின் தியாகம், நாட்டுப்பற்று என்பன எம்மைச் செழுமைப்படுத்துகின்றது. எமது தலைவர் கூறுகார், வரலாறு எமது வழிகாட்டி என்று. இத் தலைவரின் மாவீரர் வரலாறு எமக்கு, எமது போராட்டத்திற்கு சிறந்ததொரு பாடமாக அமைகின்றது. இத்தகைய மாவீரர் ஏற்றிச் சென்ற விடுதலைத் தீயை இன்று கொழுந்துவிட்டு எரிந்து தமிழீழ விடுதலைப் போராட்டமாக தோற்றம் பெற்றிருக்கின்றது என்றார்.

இவ்விழாவில் கட்டப் பொறுப்பாளர் திரு. கலையரசன், திருவாளர்கள் சி. திருநாவுக்கரசு, சி. வேதநாயகம், ஞானமூர்த்தி, சந்திரசேகரம் போன்றோர் உரை நிகழ்த்தினார்கள். ■

## இரவு வேளையில் காடுகளில் தஞ்சம் புகும் பெண்கள்

■ மட்டு. ஆயித்தியமலையில் அவலம்

மட்டக்களப்பு ஆயித்தியமலைப் பகுதியிலுள்ள தமிழ் மக்கள் இரவில் காடுகளில் தங்கவேண்டிய அவல நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

சிறிலங்கா இராணுவத்தினர் அநாகரிகமான அத்துமீறிய செயல்கள் காரணமாக குறிப்பாக தமிழ்ப் பெண்கள் இவ்வாறான இக்கட்டான நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

இரவு வேளைகளில் விசாரணை என்று கூறிக்கொண்டு சிறிலங்காப் படையினர் வீடுகளில் அத்துமீறிப் புகுந்து தமிழ்ப் பெண்களிடம் அநாகரிகமான முறையில் நடந்து கொள்கின்றனராம்.

அண்மையில் கிராமத்துக்குள் புகுந்த படையினர் இளம் பெண் ஒருவரைப் பிடித்துச் சென்றனர். அதையடுத்து கிராம மக்கள் திரண்டு படை முகாமுக்குச் சென்றனர். அங்கு அந்தப் பெண் குறித்து கேட்டபோது 'தமக்கு ஒன்றும் தெரியாது' என்று படையினர் கூறிவிட்டனர்.

ஆனால் கிராம மக்கள் திரும்பிச் சென்ற வேளை, வழியில் பெண்கள் அணியும் ஒரு சோடி செருப்பும், துவாய் ஒன்றும் கண்டெடுக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்குத் தந்தி மூலம் முறையிடப்பட்டுள்ளது.

எனினும் படையினரின் அத்துமீறிய நடவடிக்கைகள் ஆயித்தியமலையில் தொடர்ந்து இடம்பெற்று வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. ■

# நிகழ்வும் நினைவும்

– திலீபன் –

## ஏன் இந்த ஒப்பாரி?

பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் அங்கம் வகித்து வரும் கொழும்புத் தமிழ்க் குழுக்கள், தாம் ஏமாற்றப்பட்டு விட்டதாகவும், தமக்கு நம்பிக்கைத் துரோகம் இழைக்கப்பட்டுள்ளதாகவும் கூட்டறிக்கை ஒன்றினை விடுத்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நாட்டில் சமாதானத்தையும் அரசியல் ஸ்திரத் தன்மையையும் ஏற்படுத்துவதற்குரிய வழிமுறைகளை விதந்துரைப்பதற்காக, இலங்கைப் பாராளுமன்றத் தெரிவுக்குழு' என்று தன்னை அழைத்துக் கொண்ட இப்பாராளுமன்றத் தெரிவுக்குழு, உண்மையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை நசுக்குவதற்குரிய பேரினவாதத்தின் ஒரு சூழ்ச்சியே.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு, சமாதான ரீதியில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக ஒரு மாயத்தோற்றத்தினை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்திய வண்ணம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை நசுக்குவதற்குரிய இராணுவ நடவடிக்கைகளையே சிறிலங்கா அரசு தீவிரப்படுத்தி வருகின்றது. இன்னொரு வகையிற் கூறுவதாயின், சிறிலங்கா அரசு தனது இராணுவத் தீர்வு முயற்சியினை மறைப்பதற்கான ஒரு திரையாகவே பாராளுமன்றத் தெரிவுக் குழுவினைப் பயன்படுத்தி வருகின்றது. இக்குழு இந் நோக்கத்திற்காகத்தான் பயன்படுத்தப்படும் என்பது, பேரினவாதத்தின் சூழ்ச்சியினை வரலாற்று அனுபவத்தின் மூலம் உணர்ந்து கொண்ட எவராலும் இலகுவில் புரிந்து கொள்ளப்பட்டிருக்கக் கூடியதாகும்.

ஆனால், இன்று தமிழ்க் குழுக்கள் விடுத்துள்ள இக் கூட்டறிக்கை குறித்த செய்தியினை அறிந்த போது, இக்குழுக்களை எண்ணிச் சிரிப்பதா அல்லது அழுவதா என்ற எண்ணமே என்னுள் எழுந்தது.

யார் இந்தக் குழுக்களைச் சேர்ந்தவர்கள்? இன்று விடுதலைப் போராட்டப் பாதையில் தடம் மாறி மக்களின் விடுதலைக் கெதிரான துரோக நிலைப்பாட்டினை எடுத்துக் கொண்டிருக்கும் இவர்கள், ஒரு காலத்தில் பேரினவாதத்தின் ஏமாற்றுக்களையும் ஒடுக்குமுறையினையும் எதிர்த்து ஆயுதம் ஏந்தியவர்கள். ஆயுதப் போராட்டம் மூலம் அடையப்படும் தமிழீழம் மூலமே தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்திரத் தீர்வு காணப்பட முடியும் எனக் கூறியவர்கள். சிறிலங்கா அரசு பேச்சுவார்த்தை, சமாதானம் என்று கூறி தமிழ் மக்களை ஏமாற்றிய வரலாற்றை பக்கம் பக்கமாக எழுதியவர்கள். பௌத்த சிங்கள பேரினவாதம் தோற்கடிக்கப்படாமல், தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க முடியாது எனப் பொழிந்தவர்கள்.

ஆனால், விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கில் இவர்கள், ஆதிக்க சக்திகளின் கைப்பொம்மைகளாக மாறி தடம் புரண்டு போனார்கள். தமது இருப்புக்காகவும் அதிகாரத்துக்காகவும் போராட்டத்திற்குத் துரோகம் புரியும் மனப் பக்குவத்தினைப் பெற்றுக் கொண்டார்கள். தமிழ் மக்களின் விடுதலை என்ற நோக்கினை விட தம்மை அரவணைப்பவரின் நலனாகவே இவர்களுக்குப் பெரிதாய்ப் போயிற்று.

இதனால் தம்மை நம்பி போராட்டத்தில் இணைந்து கொண்ட ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்குத் துரோகம் செய்தது இக்குழுக்களின் தலைமைகள். போராட்டத்திற்காக தம்மை அர்ப்பணிக்க வந்த ஆயிரக்கணக்கான இளைஞர்களை போராட்டத்திலிருந்து அந்நியப்படுத்தியது. இந்தத் தலைமைகள்.

இந்தத் தலைமைகளை விட்டு விலகிய பல இளைஞர்கள் இன்று போராட்டத்துடன் தம்மை இணைத்துக் கொண்டு வருவதனை நாம் நடைமுறையில் காணக்கூடியதாக இருக்கின்றது. ஆனால் இக்குழுக்களின் தலைமைகள் விரல்விட்டு எண்ணக்கூடிய எண்ணிக்கையினைக் கொண்ட தொகையினரைத் தம்மகத்தே கொண்டவர்களாக கொழும்பில் இருந்து இயங்குகின்றனர்.

தமிழீழ மக்களைக் கொன்றொழித்து, விடுதலைப் போராட்டத்தினை நசுக்கி விடலாம் என்று திட்டமிட்டுச் செயற்பட்டுவரும் சிறிலங்கா அரசுடன் கைகோர்த்து நிற்கும் இவர்கள், தமது செயற்பாட்டுக்கு ஜனநாயக முலாம் பூசிக் கொள்ள முயன்றனர். தமிழ் மக்களின் உரிமைகளை சிறிலங்கா அரச தரப்போவதில்லை என்று கூறிய அதே வாயினால்; சிங்கள பௌத்த பேரினவாத அரசியல் தந்திரத்தை அடித்து நொறுக்கும் போதே தமிழ் மக்கள் விடுதலை அடைய முடியும் என எழுதிய அதே கைகளினால் சிறிலங்கா பேரினவாத அரச இயந்திரத்தைத் துதி பாடிக் கொண்டார்கள். தமிழ் மக்களுடைய பிரச்சினையினைத் தீர்ப்பதற்கு எந்தவொரு உருப்படியான நடவடிக்கையினை சிறிலங்கா அரசு எடுக்காதிருந்தபோது; மக்களைக் கொன்றொழிப்பதற்கு புதிய இராணுவ நடவடிக்கைகள் குறித்த போர்ப் பிரகடனங்களை சிறிலங்கா அரசு மேற்கொண்டிருந்த வேளை, 'புலிகளை' அழிக்கும் சிறிலங்கா அரசின் நடவடிக்கைகளுக்கு தமது ஆதரவினை வழங்கிக் கொண்டனர். சில குழுக்கள் இராணுவத்துடன் இணைந்து இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடும் அளவுக்கு தமது விசுவாசத்தினைக் காட்டிக் கொண்டன.

மக்களின் போராட்டத்திற்கு இவர்கள் செய்த துரோகத்திற்குப் பரிசாக இவர்களுக்கு ஒரு 'அரசியல் அந்தஸ்து' வழங்கப்பட்டது. இவ் அரசியல் அந்தஸ்து சிறிலங்கா அரசால் வழங்கப்பட்டமைக்கு இரு காரணங்கள் உண்டு.

(1) இராணுவத் தீர்வு காணும் முயற்சியினை மேற்கொள்ளும் போது தமிழர் பிரதிகளுடன் தாம் தொடர்பு வைத்துக் கொண்டிருப்பதாகவும் அப்பிரதிநிதிகள் அரசுடன் இணைந்து சமாதானத் தீர்வு காணும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதாகவும் ஒரு வாதத்தினை சர்வதேச அரங்கில் முன் வைப்பதற்கு இக்குழுக்களை சிறிலங்கா அரசு பயன்படுத்த முற்பட்டமை.

(2) தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்ளப்படுடின், தமது அரைகுறைத் தீர்வு முயற்சிகள் [illegible] எனவே தமிழர் போராட்டத்தினை [illegible] தீர்வுடன் சிதைக்க வேண்டுமாயின் இத் தமிழ்க் குழுக்களையும் உயிர் பிழைக்க வைத்து அவர்களை தமிழர் பிரதிநிதிகளாகக் காட்டுவது அவசியம் என்ற சிறிலங்கா அரசின் திட்டம்.

இவ்விரு நோக்கின் அடிப்படையிலேயே இத் தமிழ்க் குழுக்களுக்கு ஒரு போலி அரசியல் அந்தஸ்தினை சிறிலங்கா அரசு வழங்கியுள்ளது. இதன் அடிப்படையில் சர்வகட்சி மகாநாடு, பாராளுமன்றத் தெரிவுக்குழு போன்ற போலி அமைப்புக்களை உருவாக்கி, இக் குழுக்களை ஒரு கயிற்றில் கட்டி உலவ விட்டு கயிற்றின் முனையினைத் தனது கையினில் வைத்துள்ளது சிறிலங்கா அரசு. தனது நோக்கத்திற்கு இக் குழுக்களைப் பயன்படுத்தலாம் என்ற நம்பிக்கை சிறிலங்கா அரசுக்கு இருக்கும் வரை மட்டுமே இக் குழுக்களுக்கு 'சுதந்திரம்' வழங்கப்படும்.

இந்தச் 'சுதந்திரத்துடனேயே' தமிழ்க் குழுக்கள் இயங்கி வருகின்றன. தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் சுமை தமது தோள்களின் மீது உள்ளதாக இவர்கள் நினைத்துக் கொண்டமை உண்மையில் வேடிக்கையே. தான் முன்வைக்க வேண்டிய தீர்வுத் திட்டத்தினை தான் முன்வைக்காது, தீர்வுத் திட்டத்தினை, 'கண்டு பிடிக்குமாறு' இவர்களை சிறிலங்கா ஜனாதிபதி கேட்டுக் கொண்டமையின் சூழ்ச்சியினை புரிந்து கொள்ளாமலோ அல்லது புரிந்து கொள்ள விரும்பாமலோ 'வேள்விக்கு வளர்க்கப்படும் கடாக்களைப்' போல சிறிலங்கா அரசுக்குத் தமது வாலை ஆட்டிக் கொண்டனர் இக் குழுக்கள்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து முக்கிய இரு கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் எந்த ஒரு தீர்வுத் திட்டத்தினையும் முன்வைக்காத போதும் இக் குழுக்கள் இனப்பிரச்சினைத் 'தீர்வு' கண்டு விடும் முயற்சியில் தமது வேகத்தினைக் காட்டின.

இன்று, பாராளுமன்றத் தெரிவுக்குழு உருவாக்கப்பட்டு ஒரு வருடம் கழிந்த நிலையில், எந்தவொரு உருப்படியான தீர்வுத் திட்டமும் இக் குழுவில் விவாதிக்கப்படாத நிலையில் தாம் ஏமாற்றப்பட்டு விட்டதாகவும் தமக்கு நம்பிக்கைத் துரோகம் இழைக்கப்பட்டு விட்டதாகவும் இத் தமிழ்க் குழுக்கள் புலம்புகின்றன.

சிறிலங்கா அரசில் நம்பிக்கை வைத்து ஏமாறும் அளவுக்கு வரலாற்றுக் குருடர்களாக இவர்கள்

தொடர்ச்சி 11ம் பக்கம் ....

### சமூக பொருளாதார..

மாவீரர்களின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிறுவர்களின் பராமரிப்பையும் வளர்ச்சியையும் கருதி கொத்தணிக் கிராமங்களில் ஐம்பதிற்கும் மேற்பட்ட பாலர் பாடசாலைகளும் ஐம்பதிற்கும் மேற்பட்ட கல்வி வளர்ச்சிக் கழகங்களும் நிறுவப்பட்டு ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாலர்களும், இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களும் கல்வி வசதியைப் பெறுகின்றனர். அத்துடன், சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நெறி, தையல் பயிற்சி நெறி, சுகாதார தொண்டர் பயிற்சி நெறி, கால்நடைப் பயிற்சி நெறி போன்ற பயிற்சி நெறிகளை உள்ளடக்கிய 'சர்வகலா பயிற்சி'எனும் வேலைத் திட்டம் மக்களுக்கு தொழிற் பயிற்சியளித்து தொழில் புரியத் தயாராக்கும் வேலைத் திட்டமாக இக் கொத்தணிக் கிராமங்களில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

சுகாதார வேலைத் திட்டத்தின் கீழ் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட பயிற்றப்பட்ட தொண்டர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு, மருத்துவ உடல் நல பாதுகாப்புக்கள் சம்பந்தமான ஆலோசனைகள் அளிக்கப்பட்டு வருகிறது. அதேவேளை போசாக்கின்மையைப் போக்க கர்ப்பிணித் தாய்மார்கள் குழந்தைகள் ஆகியோருக்கு சத்துணவுப் பால்மா வழங்கப்பட்டும் வருகிறது.

மீளப்பெறும் கடனாக ஐநூறுக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு நெற்செய்கைக்கான உதவிகளும், 1500 க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு மேட்டுப் பயிர் -சிறுதானியப் பயிர்ச் செய்கை ஆகியவற்றிற்கான உதவிகளும், நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு தோட்டப் பயிர்ச் செய்கைக்கான உதவிகளும் செய்யப்பட்டு வருகின்றது. கூட்டுப் பண்ணை முறை பல கிராமங்களில் வெற்றிகரமாக அமுலாக்கப்பட்டுள்ளது. உடையார்கட்டுக்குளத்திலிருந்து உற்பத்தியாகும் மூங்கிலாறுக்கு குறுக்காக மக்களே கூட்டுறவு முறையில், கூட்டுழைப்பினால் ஒரு அணை அமைத்து எண்பது ஏக்கர் நிலத்தை இருபோக பயிர்ச் செய்கைக்கு பயனுடையதாக்கி ஒரு சாதனையை நிலைநாட்டியுள்ளனர். இச்சாதனை மூலம் இருபத்தையாயிரம் ரூபா செலவில், அண்ணளவாக பதினைந்து இலட்ச ரூபா பெறுமதியான நன்மை பெறப்பட்டுள்ளது.

ரூபா நூறு முதல் ரூபா ஆயிரம் வரை சுய தொழில் மீளளிப்பு கடன்கள் வழங்கப்பட்டு சுயதொழில் வேலை வாய்ப்புக்கள் வளர்க்கப்படுகிறது. நூற்றுக்கும் மேற்பட்ட வறிய குடும்பங்களுக்கு மீளளிப்பு இல்லாத உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன. 150 குடும்பங்களுக்கு கோழி வளர்ப்புத் திட்டத்தின் கீழ் கோழிகளும், சிறுவியாபாரத்திற்கு என 25 பேருக்கு துவிச்சக்கர வண்டிகளும் அளிக்கப்பட்டுள்ளன.

கணவனை இழந்த பெண்கள், பெற்றோரைப் பிரிந்த குழந்தைகள், உடல் ஊனமுற்றோர், பராமரிப்பற்ற முதியோர், நோயாளிகள் ஆகியோருக்கு புனர்வாழ்வுத் திட்டங்களும் மாதாந்த கொடுப்பனவு உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

பதினைந்துக்கும் மேற்பட்ட விளையாட்டுக் கழகங்களும் நாற்பதிற்கும் மேற்பட்ட படிப்பகங்களும் இக்கிராமங்களில் இயங்குகின்றன. கலை இலக்கிய முயற்சிகளின் வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக திருமலையிலிருந்து இடம் பெயர்ந்த மக்களால் 'காணி நிலம் வேண்டும்' என்ற நாடகமும், வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களால் 'போராட்ட மேகங்கள்' என்ற நாடகமும் மேடையேற்றப்பட்டமை குறிப்பிடத் தக்கன.

இச்சமூக பொருளாதார வளர்ச்சித் திட்டப் பொறுப்பாளராக திரு ரவி மிகச் சிறப்பாகச் சேவையாற்றி வருகிறார். நீண்டகால அகதி முகாம் வாழ்க்கை தற்கொலைக்கு ஒப்பானது என்பதை உணர்ந்து தொடங்கப்பட்ட 'குடியிருப்பு' கிராமங்களில் மக்கள் உழைத்து வாழும் வாழ்க்கை முறை மக்களுக்கு மன நிறைவையும் தமிழீழத் தேசத்திற்கு சமூக பொருளாதார வளர்ச்சியையும் அளித்து வருகிறது. ■

## மாவீரர் சிந்திய குருதி விடுதலையைப் பெறட்டும்

"நாம் சிந்தும் குருதி தமிழீழத்தை அமைக்க ஆறுகளாகப் பாயட்டும். அவை சேறுகளாக்கப்பட்டு விடக்கூடாது என்றே களத்தில் நிற்கும் போராளிகள் விரும்புகின்றனர்" என்று யாழ். மாவட்ட [illegible] புலிகளின் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் மறவன் தெரிவித்தார்.

கழிந்த [illegible] விக்டோரியாக் கல்லூரி திறந்த வெளியரங்கில் நடந்த [illegible] புலிகளின் மாதாந்த மாவீரர் நினைவு நாள் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்: எமது மக்கள் ஒவ்வொருவரும் இந்த மாவீரர்களின் இலட்சியக் கனவுகளை நிறைவு பெறச் செய்ய உழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

வலிகாமம் வடக்கு பிராந்திய பொறுப்பாளர் [illegible] தலைமையில் நடைபெற்ற இந்நிகழ் கூட்டத்தில் யாழ் மாவட்ட உதவி அரசியல் நிர்வாக பொறுப்பாளர் தங்கன், [illegible] பொறுப்பாளர் வரதன் உட்பட பல பிரமுகர்களும் கலந்துகொண்டு உரையாற்றினர். ■

## மாணவர் உணவு முத்திரைக்கு உள்ளூர் உணவுப்பொருளே !

யாழ் மாவட்டத்தில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளூர் உணவுப் பொருள்களைக் கொள்வனவு செய்தே இனிமேல் மாணவர் உணவு முத்திரைக்கு விநியோகிக்க வேண்டும்.

யாழ் அரசாங்க அதிபர் இந்த அறிவிப்பை விடுத்திருக்கிறார்.

மாணவர் உணவு முத்திரைக்கு செயலகத்தால் உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்படமாட்டா என்றும் ப.நோ.கூ. சங்கங்கள் தாமே உள்ளூர் உணவுப் பொருள்களை கொள்வனவு செய்து மாணவர் உணவு முத்திரைக்கு விநியோகிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். ■

## கிளிநொச்சி விவசாயிகளுக்கு கனேடிய அரசு மூலம் உதவி

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 300 விவசாயிகளுக்கு விவசாய உதவிகள் கிடைக்கும். மனித முன்னேற்ற நடுநிலையம் மூலமாக கனேடிய அரசு இந்த உதவியை வழங்க உள்ளது. இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இந்த உதவி கிடைக்கும்.

கனேடிய அரசு தனது தூதரகம் மூலம் வழங்கிய 4 மினி டிராக்டர்களும், 29 நீரிறைக்கும் இயந்திரங்களும் கிளிநொச்சிக்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

விவசாயிகளுக்கு தேவையான உரம், விதைகள் அந்த அமைப்பால் வழங்கப்பட்டு வருகின்றன. ■

## யாழ் மாநகரை ஒளியூட்ட 250 விளக்குகள் தயாரிப்பு

யாழ் மாநகர சபை எல்லைக்குள் இரவு வேளைகளில் 10 மணிவரை வீதிகளுக்கு விளக்கு வெளிச்ச வசதியினை ஏற்படுத்த மாநகர ஆணையாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதற்குத் தேவைப்படும் சுமார் இரண்டரை லட்சம் ரூபாவை கொழும்பு சென்றுள்ள யாழ் அரச அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் ஊடாக அத்தியாவசிய தேவைகள் நாயகத்தை கோரியுள்ளார்.

இவ் எண்ணெய் விளக்குகள் மாநகர சபையினரால் செய்யப்படுகிறது. பரீட்சார்த்தமாக ஒரு விளக்கு மாநகரசபை வாசலில் எரியவிடப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக அணையாளர் மேலும் தெரிவிக்கையில், இந் நடவடிக்கைக்கென 250 விளக்குகள் தயாரிக்கப்படுமெனவும், இதன் மூலம் இரவு வேளைகளில் மக்களுக்கு உதவ முடியுமெனவும் தெரிவித்தார். ■

### புனர்வாழ்வு நிதிபெறும் சில நிறுவனங்கள் மோசடி

யாழ்ப்பாணத்தில் புனர்வாழ்வு பணியில் ஈடுபட்டிருப்பதாகச் சொல்லிக் கொண்டு கொழும்பில் சில அரச சார்பற்ற நிறுவனங்கள் வெளிநாட்டு மனித நேய ஸ்தாபனங்களிடம் உதவி பெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கொழும்பில் அலுவலகங்களை நிறுவிச் செயற்படும் இந் நிறுவனங்கள் யாழ்ப்பாணத்தில் புனர்வாழ்வுப் பணிகளுக்கெனப் பெறும் உதவிகள் இதுவரை யாழ்ப்பாணத்தை வந்தடையவில்லை என்று யாழ் அரச சார்பற்ற நிறுவன வட்டாரங்கள் கூறுகின்றன. யாழ்ப்பாணத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்தில் மொத்தம் பதினைந்து அரசு சார்பற்ற மனித நேய ஸ்தாபனங்கள் இணைந்து செயற்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. ■

## 'கஜபாபுர' என்ற பெயரில் செட்டிக்குளத்தில் பாரிய குடியேற்றம்

■ தமிழர்களை பௌத்தத்தில் சேருமாறு வற்புறுத்து

'கஜபாபுர' என்ற பெயரில் செட்டிக்குளம் பிரதேசத்தில் உள்ள பல தமிழ்க் கிராமங்கள் சிங்கள மயப்படுத்தப்படுகின்றன. இதற்காக நூற்றுக்கணக்கான சிங்களவர்கள் பௌத்த பிக்குகளாலும், இராணுவத்தினாலும் இப்பகுதிக்கு அழைத்து வரப்படுகின்றனர்.

அங்குள்ள முத்துமாரியம்மன் கோயில் முற்றாகத் தகர்க்கப்பட்டு அப்பகுதியில் புதிதாக பௌத்த விகாரை ஒன்று கட்டும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அங்குள்ள தமிழர்களின் வீடுகள், கடைகள் மற்றும் வர்த்தக ஸ்தாபனங்கள் முற்றாக அழிக்கப்படுகின்றன.

திருகோணமலையிலிருந்து அழைத்துவரப்பட்ட கட்டடப்பணியாளர்கள் மூலம் 800 புதிய வீடுகள் கட்டும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவ் வீடுகளில் சிங்களக் குடும்பங்கள் தங்கவைக்கப்படுவார்கள் என்று அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சமீபத்தில் இந்தியாவிலிருந்து திரும்பிவந்து செட்டிக்குளம் அகதி முகாமில் தங்கியுள்ள சுமார் 150 தமிழ்க் குடும்பங்களை பௌத்த மதத்தில் சேரும்படியும், தமிழ்ச் சிறுவர்களை பௌத்த பிக்குகளாகும்படியும் இராணுவ அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

அரசின் இத்திட்டமிட்ட சிங்கள மயப்படுத்தும் திட்டம் அங்கிருந்து இடம்பெயர்ந்து வந்துள்ள தமிழ் மக்கள் மத்தியில் வேதனையையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

சிறீலங்கா அரசின் இப்புதிய ஆக்கிரமிப்புத் திட்டம் பற்றி மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

செட்டிக்குளம் பிரதேசத்தில் இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழுள்ள நிலப்பகுதியை சிங்கள மயப்படுத்தும் நோக்குடன் தமிழர்களின் காணிகளில் சிங்களக் குடியேற்றம் மேற்கொள்ளப்படுகிறது.

பெரியபுளியாலங்குளம், முதலியாகுளம், அடம்பன்குளம், பெரியகுளம், வீரபுரம் ஆகிய கிராமங்களுடன் மேலும் பல தமிழ்க் கிராமங்களை இணைத்து 'கஜபாபுர' என்ற பெயரில் இக் குடியேற்றத் திட்டம் கொள்ளப்படுகிறது.

முற்றிலும் தமிழ் மக்கள் வாழ்ந்துவந்த இப்பகுதியிலேயே இத் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. இக்கிராமங்களிலிருந்து 1990 யூன் மாதம், அனைத்து தமிழ்க்குடும்பங்களும் இடம்பெயர்ந்து சென்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பகுதியில் உள்ள தமிழ் மக்களின் வீடுகளும், கடைகளும் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. பாரிய பௌத்த விகாரை கட்டப்பட்டுக்கொண்டிருக்கிறது. புதிதாக 800 வீடுகள் கட்டும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வீட்டினருக்கும் அரசாங்கத்தினால் எண்பதாயிரம் ரூபா பணம் ஒதுக்கப்பட்டுள்ளதாம்.

அங்கு அகதி முகாம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அகதி மக்களை நாடிச் செல்லும் இராணுவ அதிகாரிகளும், பிக்குமாரும் அம்மக்களைப் பௌத்த மதத்தில் இணையும்படி வற்புறுத்தி வருகின்றனர். தமிழ்ச் சிறுவர்களை பிக்குகளாக்கி புதிதாக கட்டப்படும் விகாரையில் சமயப்பணிபுரிய வைப்பதாகவும் கூறியுள்ளனர். சமீபத்தில் வவுனியா அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழ் அதிகாரிகள் இதைக் கண்டித்துள்ளனர்.

வற்புறுத்தி மக்களை வேறொரு மதத்தில் இணைக்கும் நடவடிக்கை பற்றி வவுனியா பிரஜைகள் குழுத்தலைவர் திரு. சொர்ணபாலா வேதனையுடன் அரசாங்க அதிபருக்கு சுட்டிக்காட்டியபோது அருகில் இருந்த இராணுவ அதிகாரிகள் இதை மறுத்துள்ளனர். இக்கூட்டத்தில் புதிய குடியேற்றத் திட்டம் பற்றி எவரும் பேசவில்லையாம்.

'கஜபாபுர' என்ற பெயரில் உருவாகும் இப்பகுதியில் விவசாய பண்ணை ஒன்று பெரியளவில் உருவாக்கப்பட்டு வருகிறது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. ■



மேஜர் பாரதி எழுதிய 'காதோடு சொல்லிவிடு' நூல் வெளியீட்டு விழா விக்னேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்றபோது நூலின் பிரதியை மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் ஜெயா மேஜர் பாரதியின் பெற்றோரிடம் கையளிப்பதை படத்தில் காணலாம்.

மட்டு. மக்கள் வங்கியில்

## நகை அடைவு வைத்தோர் மேல் கம்பியால் தாக்கல்

வடக்கு கிழக்கு சம்பவங்களால் பாதிக்கப்பட்டு தமது அடைவு நகைகளை நீண்ட காலம் பெறமுடியாது இருந்த நகைச் சொந்தக்காரர் பலர், நகைகளை மீளப் பெறுவதற்காக வங்கியின் வற்புறுத்தலின்படி அங்கு சென்றிருந்தபோது இரும்புக்கம்பிகளால் பலமாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு நகரில் இடம்பெற்ற இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது: மக்கள் வங்கியின் நகரக்கிளை மற்றும் அரசடிக்கிளை ஆகியவற்றில் அடைவு வைத்தவர்கள் அவற்றை மீளப்பெறுவதற்காக சம்பவ தினத்தன்று மட்டக்களப்பு நகரக்கிளையின் முன்றலுக்கு வரும்படி மக்கள் வங்கி அறிவித்திருந்தது.

வாடிக்கையாளருக்கு வெவ்வேறு நேரங்கள் கொடுக்கப்பட்டிருந்த போதும் வங்கியின் முன்பாக சகலரும் ஒரே நேரத்தில் குழுமி பதையடுத்து பொலிசார் வரவழைக்கப்பட்டனர் எனவும் பொலிசார் இரும்புக்கம்பிகளால் அடித்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இத்தாக்குதலால் [illegible] [illegible] பல முதியவர்கள் படுத்த காயமடைந்துள்ளனர். ■

### அவுஸ்திரேலியா.....

டிய முயற்சிகள் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி 1991 பங்குனியில் மனித உரிமைகள் உப குழுவொன்றை அமைத்தனர். ஒரு வருடமாக பல சாட்சியங்களை நேரடியாக கேட்டதன் பின்னர் 718 பக்க அறிக்கை ஒன்றை பாராளுமன்றக் கூட்டுக் குழு வெளியிட்டுள்ளது.

இவ் அறிக்கையில் 7 வது அத்தியாயம் அதிக அளவில் மனித உரிமை மீறல்கள் நடைபெறும் நாடுகள் பற்றிக் கிடைத்த சான்றுகளை மையமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. இதில் சிறீலங்காவும் இடம்பெற்றுள்ளது. ■

### படகு மூழ்கியது

திருமலை உப்பாற்றில் சிறீலங்கா கடற்படைப் படகு ஒன்று மூழ்கியதால் சிறீலங்கா கடற்படையினர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இதில் பயணம் செய்த பொலிஸ் கருணரத்னா 7-58 ரைபிளை இழந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் 3 பொலிசாரும் 3 இராணுவத்தினரும் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. ■

### ஒக்ஸ்பாம் உதவியுடன் குளம்புனருத்தாரணம்

ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் உதவியுடன் பூநகரிப்பகுதியில் இருந்து வெளியேற்றப்பட்டிருக்கும் மக்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் நோக்குடன் ஜெயபுரத்திற்கு அண்மையில் உள்ள பண்டிவெட்டிக்குளத்தை புனருத்தாரணம் செய்யும் வேலை பூநகரி அபிவிருத்தி புனர் வாழ்வுக் கழகத்தால் செயற்படுத்தப்பட்டு அவ் வேலை முடிவுறும் தறுவாயில் உள்ளது. இவ்வேலைத் திட்டத்திற்கு தேவையான உபகரணங்களும் ஒக்ஸ்பாம் நிறுவனத்தினரால் வழங்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தை அமுல்படுத்துவதனால் குளத்தில் கூடியளவு நீரை சேமிப்பதுடன் கோடை காலத்தில் தோன்றும் வரட்சி நிலைமையைப் போக்கலாம். மக்களின் அன்றாட தேவைகளுக்கும் இந்நீரை பயன்படுத்தலாம் என்பதுடன் வீட்டுத் தோட்டம் செய்வதற்கு உந்து சக்தியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ■

### சிறீலங்கா அரசின்...

ஆயிரத்திற்கும் மேற்பட்ட புலிவீரர்கள், சுமார் நாலரைக் கிலோ மீற்றர் நீளத்திற்கு அமைக்கப்பட்டிருந்த 150க்கும் மேற்பட்ட பலம் வாய்ந்த தொடர் காவலரண்களையும், கண்ணி வெடி வயல்களையும், தற்காப்பு அரண்களையும், அவற்றிற்கு முன்னால் அமைக்கப்பட்டிருந்த பனையளவான மண் அணைகளையும், உட்பகுதியின் நடமாட்டங்களை வெளியிலிருந்து அவதானிக்க முடியாது அமைக்கப்பட்ட தகர வேலிகளையும், முட்கம்பிகளையும், இப்பகுதிகளை குறி வைத்த வண்ணம் தளத்தின் உட்பகுதியில் பாதுகாப்பான இடங்களிலிருந்த நூற்றுக்கணக்கான எறிகணைச் செலுத்திகளையும், அதிலிருந்து ஏவப்படத் தயாராக இருந்த ஆயிரக்கணக்கான எறிகணைகளையும், தளத்தினுள்ளே தரித்து நின்ற உலங்கு வானூர்திகள் குண்டு வீச்சு விமானங்கள் தாங்கிகள் கவசவாகனங்களையும், எதிர்த்து முன்னேறி இப்பகுதிக் காவலரண்கள் முழுவதையும் கைப்பற்றி இராணுவத்தினரையும் பின்விரட்டி, இராணுவத்தளபாடங்களையும் சேகரித்து வீரச் சாவடைந்த போராளிகளின் உடல்களையும் காயமடைந்த போராளிகளையும் மீட்டு வந்த இச்சமர் தமிழீழ விடுதலைப் போரின் ஒரு புதிய பரிணாமமாகும்.

புலிவீரர்கள் படைத்த இந்த இராணுவச் சாதனையானது சிங்கள அரசு வரைந்து வைத்திருந்த இராணுவத் திட்டங்களை மறுபரிசீலனை செய்ய நிர்ப்பந்தித்துள்ளது. ■

### நிகழ்வும் நினைவும்...

இருந்தார்கள் என்பதனை ஏற்றுக் கொள்ள முடியுமா?

சிறீலங்கா அரசினால் அமைக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழு மூலம் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய தீர்வினை அடைய முடியும் என இவர்கள் உண்மையில் நம்பியிருப்பார்களாயின், இவர்களுக்கு அரசியல் எதற்கு?

தமது இருப்புக்காகவும் அதிகாரத்துக்காகவும் இவர்கள் செய்யும் துரோகத் தனத்தினை மறைக்கவா இந்த புதிய 'ஒப்பாரி'. ■

# பெரியதோர் தாண்டல்





[illegible]




தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

[illegible]



[illegible]



U.T.O
54 TAVISTOCK PLACE, LONDON WC91 9
T 071-837 7182 F 071-278 5866 RG

T.C.C
P.O.BOX 694, MULGRAVE NORTH
VICTORIA 3170, AUSTRALIA
Tel 03 457 6347 F 560 8224

T.C.C
VIA MARIANO STABILE - 34
90139 PALERMO, ITALY
Tel / Fax: 091-611 3179

L.T.T.E
P.O.BOX 47, 7600 STRUER
DENMARK
Tel/Fax: 97 841231

T.C.C
GROOT HERTOGINNELAAN 106
2517 BL DEN HAAG, NEDERLAND
T070-346 1863 F 346 1970

T.C.C
341 RUE DES PYRENEES
75020 PARIS, FRANCE
Tel: 435 81142 Fax: 435 81191

T.C.C
P.O.BOX 1699 VIKA
0110 OSLO - 1 NORWAY
Tel: 02-191260 F 190114

P.O.BOX 340251
5270 GUMMERSBACH 34
GERMANY

W.T.C.C
HOFJECKLIN, 7416 ROGELS
SWITZERLAND
Tel/Fax: 01 2910852

Printed by Observer Group Newspapers